# ஆண்டறிக்கை

# 2017

## உள்ளடக்கம்


பக்க இல.

**தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்ரகமுவ அபிவிருத்தி அமைச்சரின் செய்தி ......... I**

**தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்ரகமுவ அபிவிருத்தி அமைச்சு செயலாளரின் செய்தி .......... II**

**தொழில் ஆணையாளர் அதிபதியின் செய்தி ........ III**

1. தொழில் திணைக்களம் .................................. 1
2. தொழில் அமைதியை உறுதிப்படுத்துதல் .................................. 4
3. சமூகப் பாதுகாப்பு ...................................... 11
4. சமூகக் கலந்துரையாடல் ...................................... 14
5. தொழில்களிலான பாதுகாப்பும் சுகாதாரமும் ...................................... 16
6. தொழில் தரங்கள் ...................................... 18
7. தொழில் செய்யும் பெண்களின் உரிமைகளைப் பாதுகாத்தலும் சிறுவர் தொழிலை ஒழித்தலும் ...................................... 20
8. விசேட புலனாய்வுகள் ...................................... 21
9. நிர்வாகம் ...................................... 22
10. மேற்பார்வையினதும் மீளாய்வினதும் முன்னேற்றங்கள் ...................................... 25
11. நிதி முகாமைத்துவம் ...................................... 26
12. தொழில்கள்சார் துறை தொடர்பான புள்ளிவிபரங்களைப் பிரசுரித்தல் .................. 28
13. தகவல் தொழில்நுட்ப விவகாரங்கள் ...................................... 29
14. தொழில் திணைக்களத்தின் பணியாளர் விபரங்கள் ................................... 30

## தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்ரகமுவ அபிவிருத்தி அமைச்சரின் செய்தி

தனியார் துறையைச் சேர்ந்த ஊழியர்களின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றதொழில் சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்களை அமுல்படுத்தும் பிரதான அரச நிறுவனமாக தொழில் திணைக்களம் விளங்குகின்றது. இதன் பிரகாரம்,ஒட்டு மொத்த தனியார் துறையில் உள்ள சகல ஊழியர்களின் மீதும் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற 63 சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்களையும் அமுலாக்குதல் தொழில் திணைக்களத்தின் பிரதான பணியாகும்.

இதற்கும் மேலதிகமாக, கைத்தொழில் பிணக்குகளைத் தீர்த்தல்,வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகின்ற தரப்பினர்களை மத்தியஸ்தம் செய்தல், சமூகக் கலந்துரையாடலை மேம்படுத்துதல், கூட்டு உடன் படிக்கைகளுக்குள் உள்வருவதற்கு உதவுதல், கைத்தொழில் துறையில் தொழில் தரங்களைக் கண்காணித்தல் மற்றும் அமைத்தல், ஊழியர் சேமலாப நிதியத்தை கண்காணித்தல் மற்றும் மேம்படுத்துதல், சிறுவர் மற்றும் பெண்கள் தொழிலில் அமர்த்துதல் தொடர்பாக விழிப்புணர்வு மற்றும் சட்ட நடவடிக்கைகள், தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்திற்காக முறைசார் முறைமைகளை அறிமுகப்படுத்துதல், என்பன உட்பட்ட பரந்த பரப்புகள் தொழில் திணைக்களத்தினால் மேவப்படுகின்றது.

நவீன உலகத்திற்குப் பொருத்தமான வகையில் தொழில் திணைக்களத்தினை நவீனமயப்படுத்துதல் தற்காலத்தின் தேவையாகும். மிகச்சாதகமான மட்டத்தில் உள்ளதொழில் திணைக்களத்தினைமக்கள் நட்புறவுடைய திணைக்களமாக மீள அமைப்பதற்குரித்தான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன. மேலும், 179 தொழில் அலுவலர்கள் இவ்வருடம் புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளனர் என்பதுடன்திணைக்களத்தினால் வழங்கப்படும் சேவைகள் வினைத்திறன் மற்றும் தரம் என்பவற்றை அதிகரிப்பதற்காக குறிப்பிடத்தக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

2020 ஆம் ஆண்டில் சிறுவர் தொழில் இல்லாத இலங்கையை உருவாக்குதலை நோக்கி இத் திணைக்களத்தில் ஆற்றப்படும் கடமை நோக்கிலும் இவ்வருடம் நொவெம்பர் மாதம் ஆஜந்தீனாவில் நடைபெற்ற “ சிறுவர் தொழிலை இல்லாதொழித்தலின் மீதான பூகோள மாநாட்டில்” நான் கலந்து கொண்டேன், அதில் நடை பெற்ற தொழில் நுட்பக் கலந்துரையாடலில் நான கற்றுக் கொண்ட விடயங்களின் ஊடாக அனுபவங்களைப் பரிமாறவும் மற்றும் புதிய நிகழ்ச்சிகளைப் அமுல்படுத்துதவும் முடியும்.

தொழில் திணைக்களத்தின் வருடாந்த குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்களையும் அடைவதற்கு அர்ப்பணிப்புடன் செயலாற்றிய அனைத்து ஊழியர்களுக்கும் நன்றி தெரிவிப்பதற்குக் கிடைத்த சந்தர்ப்பமாக இதனைக் நான் கருதுவதுடன், அவர்கள் தொடர்ந்து அவர்களது கடமைகளை வலிமை மற்றும் ஆர்வத்துடனும் ஆற்றுவதற்கு எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**டபிள்யு. டி. ஜே. செனெவிரத்ன**
தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்ரகமுவ அபிவிருத்தி அமைச்சர்

## தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்ரகமுவ அபிவிருத்தி அமைச்சு செயலாளரின் செய்தி

தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் கீழ் உள்ள பிரதான நிறுவனங்களில், தனியார் துறை மற்றும் பகுதி தனியார் துறையைச் சேர்ந்த தொழில் தருநர்கள் மற்றும் ஊழியர்கள் ஆன இரு தரப்பினருக்கும் மிக நெருக்கமானதும், மிகப் பிரதானமானதாகவும் உள்ள நிறுவனம் தொழில் திணைக்களம் ஆகும். தொழில் திணைக்களத்தினால் 2017 ஆம் ஆண்டில்செய்யப்பட்ட பணிகளை விபரிக்கும் "வருடாந்த அறிக்கை -2017" இற்கு வாழ்த்துச் செய்தியைத் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

நாட்டிற்குள் கைத்தொழில் சமாதானத்தை பராமரித்தல் மற்றும் சமூகக் கலந்துரையாடல் ஊடாக கைத் தொழில் பிணக்குகளைக் குறைத்தல்,

ஊழியர்களின் சேவைத் தரங்களை மேம்படுத்துதல்,தொழில் சட்டங்கள் மற்றும் கட்டளைகள் என்பவற்றை அமுல்படுத்தும் போது ஊழியர்கள் மற்றும் தொழில் தருநர்கள் ஆகிய இருவர்களினதும் மேம்பாட்டிற்காக செயற்படுதல் போன்ற இன்றியமையாத பங்களிப்பு தொழில் திணைக்களத்தினால் ஆற்றப்படுகின்றது.

இதன்பிரகாரம், 2017 ஆம் ஆண்டில் இதற்கு முன்னைய ஆண்டுகளை விடவும் மேலும் வினைத்திறனுடைய சேவைகளை சேவையைப் பெறவருபவர்களுக்கு வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் தொழில் திணைக்களத்தினால் எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவ் ஆண்டில் தொழில் பரிசோதனைகள் மற்றும் முறைப்பாடுகளைத் தீர்த்தல் நடைமுறை போன்றவற்றை தரமுடையதாகவும் மற்றும் வினைத்திறன் உடையதாகவும் மாற்றுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இணைந்த தொழில் பரிசோதனை முறைமைகளை ஒழுங்காக்கல், தொழில் நிறுத்தங்கள், கைத்தொழில் பிணக்குகள், வேலைத்தள விபத்துக்களை குறைத்தல், தொழில் தருநர்கள் மற்றும் ஊழியர்கள் இருதரப்பினருக்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்துதல், ஊழியர் சேமலாப நிதியத்தின் மேம்பாட்டு நடவடிக்கைகளைசெய்தல் என்பனவும் 2017 ஆம் ஆண்டின் சாதனைக்குள உள்ளடங்கும். இத்துடன், சிறுவர்களைத் தொழிலில் அமர்த்துதலிலுருந்து பாதுகாத்தல் மற்றும் சிறுவர் தொழில் மீதான கொள்கையை ஆரப்பிக்கும் நோக்கத்தில் சிறுவர் தொழில் மீதான (2015/2016) ஆய்வு அறிக்கை வழங்கப்பட்டதும் கூட 2017 ஆம் ஆண்டின் சாதனைக்குள் உள்ளடக்கப்படும். இபோல் 179 தொழில் அலுவலர்கள் 2017 ஆம் ஆண்டில் இல் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளனர். இந்த நடவடிக்கையானது, தொழில் பரிசோதனைகள் மற்றும் முறைப்பாடுகளைத் தீர்க்கும் நடை முறைகளை மேலும் தரமுடையதாகவும் வினைத்திறன் உடையதாகவும் செய்வதற்கு உதவும். ஒட்டு மொத்த முழு முயற்சிகளும் இனி வரும் காலங்களில் திணைக்களத்திற்குச் சேவையைப் பெற வருபவர்கள் சிறந்த சேவையைப் பெற்றுக் கொள்ள வழிவகுக்கும்.

தொழில் திணைக்களத்தின் 2017 ஆம் ஆண்டிற்கான இலக்குகளை அடைவதற்கு பங்களிப்பு வழங்கிய தொழில் ஆணையாளர் நாயகம் உட்பட்ட அனைத்துதொழில் திணைக்களத்தின் அலுவலர்களுக்கும் வாழ்த்து தெரிவிப்பதற்குக் கிடைத்த ஒரு சந்தர்ப்பமாக இதனை நான் கருதுகின்றேன்.

**எஸ்.ஏ.என். சரணதிஸ்ஸ**

செயலாளர்

தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்ரகமுவ அபிவிருத்தி அமைச

## தொழில் ஆணையாளர் அதிபதியின் செய்தி

தொழில் திணைக்களமானது 1923 தாபிக்கப்பட்டு ஓர் நீண்ட பாதையைக் கடந்து வந்துள்ளது. இந் நீண்ட பாதையில், திணைக்களமானது நாட்டின்கைத்தொழில்சமாதானத்தைப் பாதுகாக்கின்றதுடன் தனியார் மற்றும் பகுதி தனியார் ஊழியர்களான இரு தரப்பினர்களுக்கும் சாதகமான வேலை நிலமைகளை பலப்படுத்துவதுடன், வேலைச்சூழலைப் பாதுகாத்து சமூகப் பாதுகாப்பு நன்மைகளை வழங்கியுள்ளது மேலும் திணைக்களமானது சிறுவர் தொழிலை மிகவும் குறைந்தளவில்பேணியுள்ளது.

தரம் மற்றும் அளவு என்னும் இரு வகையிலும் தொழில் திணைக்களத்தின் பணிகள் 2017 ஆம் ஆண்டில் தரமுயர்த்தப்பட்டுள்ளன. செய்யப்பட்ட தொழில் பரிசோதனைகளின் எண்ணிக்கைகளின் அதிகரிப்பு, முறைப்பாடுகளைத் தீர்த்தல்களின் அதிகரிப்பு, தொழில் தருநர்கள் மற்றும் ஊழியர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், ஊழியர்சேமலாப நிதியத்தினால் நடாத்தப்பட்ட மேம்பாட்ட நடவடிக்கைகள் தொழிற்சாலைப் பரிசோதனைகள் மற்றும் தொழில் பாதுகாப்பு என்பவற்றின் அதிகரிப்பு ,கணக்காய்வு போன்றன தொழில் திணைக்களத்தின்சாதனை அதிகரிப்பிற்கான பாரிய பங்களிப்பாகும். மேலும் 2017 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் நான்தொழில் ஆணையாளர் நாயகமாகக் கடமைகளைப் பொறுப்பேற்ற பொழுது துரிதமானதும் நவீனமானதுமான உலகத்தின் தேவைகளை அடைவதற்குத் தொழில் திணைக்களத்தினை மீள உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை திணைக்களம் ஏற்கனவே ஆரம்பித்திருந்தது. இதற்கான அடிப்படை முயற்சியாக ஒரு தொகுதி தொழில் அலுவலர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளனர். இனிவரும் வருடங்களில் தொழில் பரிசோதனைகள் அதிகரிக்கப்பட்டு பிணக்குகளைத் தீர்த்தல்களை விரைவாகவும் மற்றும் தரமுடையதாக செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், தொழில் திணைக்களத்தின் உள்ளகக் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. அவிசாவளை மற்றும் நீர்கொழும்பு தொழில் அலுவலகங்களுக்கான புதிய கட்டிடங்கள் கடந்த ஆண்டில் பூர்த்தியாக்கப்பட்டுள்ளதுடன் 11 தொழில் அலுவலகங்களுக்கான கட்டிட அபிவிருத்திகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. இருந்த போதிலும், தொழில் திணைக்களப் பயனாளிகளுக்கு மேலும் வினைத்திறனுடனான சிறந்த சேவையை இனிவரும் வருடங்களில் வழங்குதல் சாதகமானதாகும். மேலும், ஊழியர் சேமலாப நிதியத்தின் அங்கத்தவர்களுக்கு வெவ்வேறு ஊ. சே. நி. இலக்கங்களை வழங்குவதற்குப் பதிலாக தேசிய அடையாள அட்டை இலக்கத்தையே ஊ. சே. நி. இலக்கமாக வழங்குதல் அறிமுகப்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தொழில் திணைக்களத்தின் சாதனையை அதிகரிப்பதற்கு பங்களிப்புச் செய்த தொழில் திணைக்களத்தின் அனைத்து அலுவலர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். மேலும், தொழில், தொழில் சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அமைச்சிற்கு அவர்களது வழிகாட்டல் மற்றும் ஊக்கமளிப்பிற்கும் எனது மனமார்ந்த நன்றியைத்தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஏ. விமலவீர**

தொழில் ஆணையாளர் அதிபதி

தொழில் திணைக்களம்

# தொழில் திணைக்களம்

1923 இன் 01 ஆம் இலக்க இந்தியக் குடிவரவுக் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளின்படி இந்தியக் குடியேற்றத் தொழிலாளர்களின் நலன்புரி நடவடிக்கைகளை இலக்காகக் கொண்டுதொழில் திணைக்களமானதுதாபிக்கப்பட்டது. தற்போது, இலங்கையிலுள்ள அரசசார்பு மற்றும் தனியார் துறைகளின் தொழிலாளர் சமூகத்திற்கான தொழிற் பாதுகாப்பு மற்றும் நலன்புரி விடயங்களை உறுதிப்படுத்துவற்கான முதன்மை வாய்நத அரசாங்க நிறுவனமாக, தொழில் திணைக்களம் இயங்குகிறது.

திணைக்களத்தின் பிரதான வகிபாகமானது, இலங்கையின் பொருளாதாரத்திற்குப் பங்களிப்புச் செய்யும்அரசசார்பு மற்றும் தனியார் துறைகளின் உழைக்கும் மக்களது சம்பளங்கள், சேவை நிபந்தனைகள், தொழில் பாதுகாப்பு, தொழில்சார் சுகாதாரம், சமூகப் பாதுகாப்பும் நலன்புரி விடயங்களும்ஆகியவற்றிற்கான சட்டங்களையும் உபவிதிகளையும் ஆக்கி அமுல்படுத்துவதாகும் என்பதுடன்,தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்குத் தேவையான தொழில் அமைதியைப் பேணும் நடவடிக்கையிலும் திணைக்களம் ஈடுபடுகின்றது.

தொழில் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் 13 பிரதான பிரிவுகள் ஒன்றிணைந்து செயற்படும் அதேவேளை, 11 பிராந்திய தொழில் அலுவலகங்களும், 40 மாவட்ட தொழில் அலுவலகங்களும் 17 உப தொழில் அலுவலகங்களும், 10 மாவட்ட தொழிற்சாலைப் பரிசோதனைப் பொறியிலாளர் அலுவலகங்களும் திணைக்களத்தின் செயற்பாடுகளைப் பரவலாக்குவதன் கீழ், நாடுமுழுவதும் அமைக்கப்பட்டுள்ளன.2017 டிசம்பர் 31 ஆம் திகதியள்று தொழில் திணைக்களத்தின் சகல ஆளணியினரதும் எண்ணிக்கை 2495 ஆகும்.



**தொழில் திணைக்களத்தின் நோக்கு, செயற்பணி மற்றும் வகிபாகம்**

**நோக்கு**

சர்வதேசப் போட்டிப் பொருளாதார நிலைமையில் நீடித்து நிலைக்கும் தொழிற் சமாதான சூழலைக் கொண்டதொரு நாடு


**செயற்பணி**

நிலைத்ததொரு கைத்தொழில் சமாதானத்துடன் ஒரு கண்ணியமான வேலைச்சூழலை உருவாக்குவதனூடாக இலங்கையின் அபிவிருத்திச் செயற்பாட்டுக்குப் பங்களித்தல்

**வகிபாகம்**

- உழைக்கும் தொழிலாளர் சமூகத்தினது நலனுக்காகவும், தொழிற் பிணக்குகளைத் தீர்த்து வைப்பதற்காகவும் உருவாக்கப்பட்ட சட்டங்களையும் கட்டளைச் சட்டங்களையும் அமுல்படுத்துதல்
- வேலையாட்களுக்கான சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல்
- தொழில் துறைகளில் அளவீடுகளை மேற்கொள்ளுதல், தொழில் துறையினதும் உழைக்கும் சமூகத்தினதும் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யும் செயற்றிட்டங்களை அடையாளங் காணுதல், திட்டமிடுதல், உள்ளக மற்றும் வெளியக அறிவூட்டல் நிகழ்ச்சிகளை நடாத்துதல், கல்விரீதியான நிகழ்ச்சிகளை நடாத்துதல்
- தொழில் துறையில் உள்ள உரிய தரப்பினரிடையே சமூகக் கலந்துரையாடலை ஊக்குவித்தல்
- தொழில் துறைக்குரிய தரவுகளைச் சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல், முன்வைத்தல்
- தொழிற் சங்கங்களுடன் தகுந்த மற்றும் சிறந்த உறவுகளைப் பேணுதல்
- சர்வதேச தொழில் தாபனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி என்ற வகையில் செயற்படும் தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சுடன் இணைந்து செயலாற்றுதல்
- சர்வதேசரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கடப்பாடுகளைக் கைக்கொள்வதற்காக தொழில் துறைக்குரிய அறிக்கைகளைத் தயாரித்தலும் தகவல்களைத் திரட்டுதலும்

# தொழில் திணைக்கள ஒழுங்கமைப்பு மாதிரி




# தொழில் அமைதியை உறுதிப்படுத்துதல்

## தொழிற் பரிசோதனைகள்

சர்வதேச போட்டி நிலைமையை எதிர்நோக்கும் உள்நாட்டு உற்பத்தியைப் பாதுகாக்கும் அதேவேளை, வேலைத்தலக் கூட்டுறவு மற்றும் தொழில் துறைச் சமாதானம் ஆகியன தேசிய உற்பத்தித்திறனை உயர்த்துவதற்கும் அத்தியாவசியமானவை. திணைக்களத்தால் மேற்கொள்ளப்படும் பரிசோதனைகள் வேலைத்தலக் கூட்டுறவு மற்றும் தொழில் துறைச் சமாதானம் ஆகியவற்றைப் பேணுவதில் மிகவும் அனுகூலமானவை. ஒரு முறைசார் தொழிற் பரிசோதனைச் செயன்முறையானது வேலைத்தல விபத்துகளை இழிவளவாக்குதல், நிரந்தர சம்பளங்கள் மற்றும் நிபந்தனைகளை அமுல்படுத்துதல், வேலையாட்களின் ஓய்வு கால சமூகப் பாதுகாப்பு,தொழில் அமைதியை உருவாக்குதல் ஆகியவற்றுக்கு வழி சமைக்கிறது.

தொழில் திணைக்கள அலுவலர்களால் 2017 இல் மேற்கொள்ளப்பட்ட வழமையான பரிசோதனைகளின் எண்ணிக்கை 61,073 ஆகும்.




தொழில் அலுவலர் பதவியில் காணப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்காக டிசம்பர் மாதத்தில் 179 அலுவலர்கள் புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டனர். இதன் பிரகாரம், புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட இந்த தொழில் அலுவலர்களது சேவையின் மூலம் திணைக்களத்தால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் தொழிற் பரிசோதனைகளை அளவிலும் தரத்திலும் உயர்த்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே, 2018 இல் திணைக்களத்தால் மேற்கொள்ள எதிர்பார்க்கப்படும் வழமையான பரிசோதனைகளின் எண்ணிக்கை 90,000 ஆக இருக்கும்.






புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட தொழில் அலுவலர்கள் அதிமேதகு ஜனாதிபதி அவர்களிடமிருந்து தமது நியமனக் கடிதங்களைப் பெற்றுக்கொள்ளும் வைபவம்

## தொழில் பிணக்குகளைத் தீர்த்துவைத்தல்

தொழில் பிணக்குகளின் எண்ணிக்கையானது தொழிற் பரிசோதனைகள் காரணமாகவும், வெகுஜன ஊடகங்களைப் பயன்படுத்தி, திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு அறிவூட்டல் நிகழ்ச்சிகளாலும் 2017 இல் குறைவடைந்து காணப்பட்டது.





2017 இல் பெறப்பட்ட,சட்டபூர்வக் கொடுப்பனவுகள் மீதான முறைப்பாடுகளின் எண்ணிக்கையைக் கவனத்திற் கொள்ளும்போது, சம்பளங்கள்/மேலதிக நேரக் கொடுப்பனவுகள் என்பவை பற்றியும், பணிக்கொடை மற்றும் ஊழியர் சேமலாப நிதி பற்றியும்அதிக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. எனவே, இந்த நிலைமைகளில் உரிய முன்னுரிமைக்குக் கவனஞ்செலுத்தி, திணைக்களமானது எதிர்வரும் வருடத்தில் அவ்வாறான முறைப்பாடுகளைக் குறைப்பதில் நடவடிக்கை எடுக்கும். மு றைப்பாடஜகளின் நிலலுவைகளைக் கொடுத்துத் தீர்ப்பதனை விரைவுபடுத்துவதற்குத் தேவையானகான அறவுறுத்தல்கள் மாவட்ட மற்றும் உப தொழில் அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் அதிக முறைப்பாட்டுடன் நிலுவைகளைக் கொண்ட அலுவலகங்களின் முறைப்பாடுகளைத் தீர்த்து வைக்கும் நடைமுறையை விரைவு படுத்துவதற்கு அவற்றை தலைமை அலுவலகம் தொடர்ச்சியாக கண்காணித்துக் கொண்டிருக்கும்.

## கூட்டு ஒப்பந்தங்களைப் பதிவுசெய்தல்

தொழில் சட்டங்களால் வழங்கப்படும் வரப்பிசாதங்களிலும் பார்க்க, கூட்டு ஒப்பந்தங்கள் தொழிலாளருக்கு மேலும் வரப்பிரசாதங்களை வழங்குகின்றன. அதன்படி, 2017 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட கூட்டு ஒப்பந்தங்களின் எண்ணிக்கை 23 ஆக இருந்தாலும், கடந்த சில வருடங்களில் பதிவுசெய்யப்பட்டவற்றை விடவும் இவை குறைவடைந்திருந்தன. இருந்த போதிலும் 2017 ஆம் ஆண்டின் இறுதியில் வலுவிலுள்ள பதிவு செய்யப்பட்ட கூட்டு ஒப்பந்தங்களின் எண்ணிக்கை 62 ஆகும்.


இருந்த போதிலும், தொழில் திணைக்களம் சமூகக் கலந்துரையாடல் ஊடாக கூட்டு ஒப்பந்தங்கள் உருவாவதை ஊக்குவிக்கின்றது.




## கைத்தொழில் நீதிமன்றின் செயற்பாடுகள்


கைத்தொழில் நீதிமன்றின் முக்கிய நோக்கங்களாவன, தொழிற் பிணக்குகளைத் தீர்த்து வைத்தலும் அளிப்புக்களை வழங்கலும் ஆகும். தொழில் ஆணையாளர் அதிபதியின் வேண்டுகோளுக்கிணங்க வழங்கப்பட்ட அளிப்புகள் தொடர்பான விளக்கங்களை அளித்தல், மற்றும்,அளிப்புக்களுக்கு எதிராக ஆணை கேட்டுச் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் தொடர்பாக சட்டமா அதிபதி திணைக்களத்துடன் ஒருங்கிணைந்து செயற்படுதல் ஆகியன கைத்தொழில் நீதிமன்றால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளாகும்.

மேலும், திணைக்களத்தால் பெறப்படும் முறைப்பாடுகளினுள், தொழிற் சட்டமொன்றால் உள்ளடக்கப்பட முடியாதவை, சட்டரீதியான கொடுப்பனவுகளுடன் சம்பந்தப்படாதவை அல்லது குறித்துக்கூறப்பட வேண்டியவை போன்றன நடுத்தீர்ப்புக்கு விடப்படுகின்றன. இதன் பிரகாரம், திணைக்களத்தால் பெறப்படும் மொத்த முறைப்பாடுகளில் மிகவும் குறைந்த எண்ணிக்கையிலானவையே நடுத்தீர்ப்புக்கு விடப்படுகின்றன. முறைப்பாடுகளை விரைவாகத் தீர்த்து வைத்தல் பொருட்டு 17 அங்கத்தவர்களைக் கொண்ட சபை யொன்று 2017 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்டுள்ளது.



## தொழிற்சங்கச் செயற்பாடுகள்

தொழிற்சங்கக் கட்டளைச ்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், 2017 ஆம் ஆண்டினுள், 115 தொழிற் சங்கங்கள்/சம்மேளனங்கள் பதிவு செய்யப்பட்டன என்பதுடன், 85 தொழிற் சங்கங்கள்/சம்மேளனங்கள் இரத்துச் செய்யப்பட்டன. இதன்படி, 2017 ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட இயங்கு நிலையிலிருந்த தொழிற் சங்கங்கள்/சம்மேளனங்கள் 1815 ஆகும். தொழிற்சங்க நடைமுறைகள் தொடர்பாக அங்கத்தவர்களிடையே ஏற்பட்ட விழிப்புணவு அதிகரித்ததன் காரணமாக கடந்த சில வருடங்களாக தொழிற் சங்கங்கள் / சம்மேளனங்கள் பதிவுகளின் இரத்துச் செய்தலாளனது படிப்படியாகக் குறைவடைந்துள்ளது.





## வேலையாட்களின் தொழில் முடிவுறுத்தல் தொடர்பான செயற்பாடுகள்

எதேச்சாதிகாரமான மற்றும் நியாயமற்ற தொழில் முடிவுறுத்தல்களை ஆகக்குறைப்பதற்காகவும், சூழல் மாற்றங்களின் காரணமாகத் தமது தொழில்களை இழக்கும் வேலையாட்களுக்கு பாரபட்சமற்றதும் நியாயமானதுமான இழப்பீடுகளை வழங்குவதற்காகவும்தொழில் திணைக்களம் தலையிடுகிறது. மேலும் தமது ஊழியர்களைக் குறைக்க எத்தனிக்கும் தொழிற்றுறையினருக்கும் அவர்களது தொழில்களைப் பலப்படுத்துவதற்கான உபாயங்களையும் வழங்கி உதவுகிறது.


2017 இல், தொழில் முடிவுறுத்தல் தொடர்பாகக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை 125 ஆகும். அவற்றில் 80 இவ்வருடத்திலேயே தீர்த்துவைக்கப்பட்டன.

2017 ஆம் ஆண்டினுள், தொழிலை முடிவுறுத்துவதற்கு அனுமதி கோரி 36 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதுடன், அவற்றில் 24 விண்ணப்பங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.




## வேலைநிறுத்தங்கள்

2017 இல் அரச சார்பு மற்றும் தனியார் துறைகளிலிருந்தான உழைப்பாளர் சமூகத்திடமிருந்து அறியத்தரப்பட்ட வேலைநிறுத்தங்களின் எண்ணிக்கை 33 ஆக இருந்ததுடன்,10312 ஊழியர்கள் இவ்வேலைநிறுத்தங்களுடன் சம்பந்தப்பட்டிருந்தனர். இவ் வேலைநிறுத்தங்களால் இழக்கப்பட்ட மனித நாட்களின் எண்ணிக்கை 58279 ஆகும்.



### கடந்த ஐந்து வருடங்களில் அறிவிக்கப்பட்ட வேலைநிறுத்தங்கள்

| | | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|---|---|---|
| அறிவிக்கப்பட்ட வேலைநிறுத்தங்கள் | பெருந்தோட்டங்கள் | 22 | 31 | 20 | 35 | 12 |
| | தொழில் நிறுவனங்கள் | 20 | 07 | 16 | 20 | 21 |
| சம்பந்தப்பட்ட வேலையாட்களின் எண்ணிக்கை | பெருந்தோட்டங்கள் | 5031 | 4833 | 5229 | 18355 | 1885 |
| | தொழில் நிறுவனங்கள் | 6088 | 1618 | 3171 | 10317 | 8427 |
| இழக்கப்பட்ட மனித நாட்களின் எண்ணிக்கை | பெருந்தோட்டங்கள் | 41669 | 29165 | 29743 | 123151 | 5643 |
| | தொழில் நிறுவனங்கள் | 38754 | 8158 | 8630 | 18840 | 52636 |

## சட்டநடவடிக்கைகள்

தொழிற் சட்டங்களை மீறுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுத்தல் மூலமாக தொழிலாளர்-தொழில்கொள்வோர் உரிமைகளைப் பாதுகாத்தலும் ஊக்குவித்தலும் மற்றும் அவர்களிடையே கூட்டுறவை வளர்த்தலும் திணைக்களத்தின் பிரதான செயற்பாடுகளுள் அடங்கியுள்ளன.

அதன் பிரகாரம், 2017 இல் தொழில் அலுவலகங்களால் தொடரப்பட்ட வழக்குகள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு:

| உரிய சட்டம் | 01.01.2017 இல் முன் கொணரப் பட்டவை | இவ்வாண்டினுள் தொடரப் பட்ட வழக்குகள் | நிறைவடைந்த வழக்குகள் | வழக்குகளின் ஊடாக அறவிடப்பட்ட தொகை (ரூ.) | வழக்குகளின் ஊடாக அறவிடப்பட வேண்டிய தொகை (ரூ.) |
|---|---|---|---|---|---|
| 1.பணிக்கொடைச் சட்டம் | 2706 | 1363 | 761 | 125,186,398.00 | 130,505,316.00 |
| 2.கைத்தொழில் பிணக்குகள் சட்டம் | 253 | 40 | 8 | 1,275,836.00 | 136,650.00 |
| 3.தொழில் முடிவுறுத்தல் சட்டம் | 9 | 13 | - | - | 23,767,677.45 |
| 4.சம்பளச் சபைகள் கட்டளைச்சட்டம் | 547 | 115 | 22 | 2,337,852.00 | 7,346,025.93 |
| 5.கடை மற்றும் அலுவலக ஊழியர் சட்டம் | 161 | 41 | 8 | 296,264.00 | 20,388,024.05 |
| 6.தொழில் நியாயசபைக் கட்டளைகள் | 449 | 62 | 16 | 2,699,358.00 | 35,181,727.68 |

| உரிய சட்டம் | 01.01.2017 இல் முன் கொணரப் பட்டவை | இவ்வாண்டி னுள் தொடரப் பட்ட வழக்குகள் | நிறைவ டைந்த வழக்குகள் | வழக்குகளின் ஊடாக அறவிடப்பட்ட தொகை (ரூ.) | வழக்குகளின் ஊடாக அறவிடப்பட வேண்டிய தொகை (ரூ.) |
|---|---|---|---|---|---|
| 7.பெண்கள் மற்றும் சிறுவர் தொழில் சட்டம் | 14 | 6 | - | - | - |
| 8.ஊழியர் சேமலாப நிதிச் சட்டம் | 9013 | 2343 | 2159 | 2,141,840,039.00 | 2,066,196,116.45 |
| 9.மகப்பேற்று நன்மைகள் கட்டளைச்சட்டம் | 1 | 2 | - | - | - |
| 10.வரவுசெலவுத் திட்ட நிவாரணப் படிச் சட்டம் | 31 | 23 | - | - | 2,500,695.60 |
| 11.தனியார் சேமலாப நிதியங்கள் | 0 | 4 | - | - | 865,000.00 |

2017 இல் தொடரப்பட்ட வழக்குகள் பற்றிய விபரங்கள்

| நீதிமன்றம் | 01.01.2017 இல் முன் கொணரப் பட்டவை | தொடரப் பட்ட வழக்குகள் | அறவிடப்பட வேண்டிய தொகை (ரூ.) | நிறைவ டைந்த வழக்குகள் | அறவிடப்பட்ட தொகை (ரூ.) |
|---|---|---|---|---|---|
| உயர் நீதிமன்றம் | 148 | 33 | - | 02 | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றம் | 301 | 35 | - | 10 | - |
| மேல் நீதிமன்றம் | 167 | 104 | - | 98 | - |
| மாவட்ட நீதிமன்றமும் வர்த்தக மேல் நீதிமன்றமும் | 257 | 11 | 3,132,454,228.41 | 58 | 255,528,784.03 |
| நீதிவான் நீதிமன்றம் | 15,140 | 4,012 | 2,286,887,233.16 | 2,974 | 2,273,635,747.00 |

## சமூகப் பாதுகாப்பு


இலங்கையில் உழைக்கும் மக்களது ஓய்வு கால வாழ்க்கையைப் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்ட, மிகவும் கவர்ச்சிகரமான சமூகப் பாதுகாப்புப் பொறிமுறையான, ஊழியர் சேமலாப நிதியமானது (ஊ.சே.நி.) தொழில் திணைக்களத்தாலேயே பேணப்பட்டு வருகிறது.

இதன்படி, 2017 இல் ஊழியர் சேமலாப நிதியத்தில் பதிவு செய்துகொண்ட தொழில்கொள்வோரதும் ஊழியர்களினதும் எண்ணிக்கைகள் முறையே 6507 மற்றும் 454,971 ஆகும்.

### பங்களிப்புக்களைச் சேகரித்தல்

ஒரு குறித்த மாத்திற்குரிய ஊ.சே.நி. பங்களிப்புகள், 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிச் சட்டத்தினால் உள்ளடக்கப்படும் எல்லா ஊழியர்கள் சார்பிலும்உரிய தொழில்கொள்வோரால் இலங்கை மத்திய வங்கியில் வைப்புச் செய்யப்பட வேண்டும். ஊ.சே.நி. கண்காணிப்பு முறைமையானது ஒவ்வொரு தொழில் அலுவலகத்திலும் பயன்பாட்டிலுள்ளதால், ஊ.சே.நி. பங்களிப்புகளின் அறவீடுகள் தற்போது மிகவும் வினைத்திறனாக மேற்கொள்ளப்படுகின்றன.

கடந்த ஐந்து வருடங்களில் ஊ.சே.நி. பங்களிப்புகளின் சேகரிப்பு பற்றிய முன்னேற்றம் பின்வருமாறு காட்டப்படுகிறது:



### கை விரலடையாளங்களைப் பதிவுசெய்தல்

2017 ஆம் ஆண்டில் 12600 அங்கத்தவர்களது கை விரலடையாளங்கள் தலைமை அலுவலகத்தால் பதிவுசெய்யப்பட்டன. தற்போது கை விரலடையாளப் பதிவு முறைமையானது தலைமை அலுவலகத்திற்கு மேலதிகமாக 23 தொழில் அலுவலகங்களில் நிறுவப்பட்டுள்ளது.

*ஊழியர் சேமலாப நிதியத்தின் முன்னேற்றம்*

| | | 2016.12.31 இல் உள்ளவாறு | 2017.12.31 இல் உள்ளவாறு |
|---|---|---|---|
| அங்கத்தவர் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை | | 17,131,226 | 17,131,362 |
| தொழில்கொள்வோரின் மொத்த எண்ணிக்கை | | 223,114 | 222,735 |
| நிதியத்தின் பெறுமதி (ரூ. மில்லியன்களில்) | | 1,841,497 | 2,057,150 |
| இயங்கு நிலையிலுள்ள அங்கத்தவர்களின் எண்ணிக்கை (மில்லியன்களில்) | | 2.61 | 2.61 |
| இயங்கு நிலையிலுள்ள தொழில்கொள்வோர் | | 73,482 | 73,475 |
| புதிய பதிவுகள் | ஊழியர் | 620,806 | 454,971 |
| | தொழில்கொள்வோர் | 7,178 | 6,507 |
| நன்மைக் கொடுப்பனவுகள் | பயனாளிகளின் எண்ணிக்கை | 187,149 | 135,585 |
| | வழங்கப்பட்ட நன்மைகள் (ரூ. மில்லியன்) | 108,393 | 116,799 |
| பங்களிப்புகளின் சேகரிப்பு (ரூ. மில்லியன்களில்) | | 118,327 | 133,211 |
| ஊ.சே.நி. வீடமைப்புக் கடன்கள் | அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 12,780 | 10,800 |
| | அங்கீகரிக்கப்பட்ட கடன் தொகை (ரூ. மில்லியன்களில்) | 5,414 | 4,815 |

### ஓய்வுக்கு முன்பான 30% நன்மைகள் கொடுப்பனவின் முன்னேற்றம்

மாவட்ட தொழில் அலுவலகங்கள் தவிர்ந்த, தலைமை அலுவலகத்தால் மாத்திரம் பெறப்பட்ட, ஓய்வுக்கு முன்பான 30% ஊ.சே.நி. நன்மைகளுக்குத் தகுதியான விண்ணப்பங்களின் எண்ணிக்கை 31033 ஆகும். அவற்றில் பரிசீலிக்கப்பட்ட பின்பு வழங்கப்பட்ட ‘எஸ்’ படிவங்களின் எண்ணிக்கை 21315 ஆகும். கொடுப்பனவுக்காக இலங்கை மத்திய வங்கிக்கு முன்னளிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 21699 ஆகும்.

பயனாளிகளது எண்ணிக்கைகள்

| நன்மை | பயனாளிகளது எண்ணிக்கை | | |
|---|---|---|---|
| | 2015 | 2016 | 2017 |
| ஓய்வுபெறும் வயதை அடைந்ததன் மீது ஊ.சே.நி. நன்மை பெற்றவர்கள் | 238063 | 87541 | 87268 |
| விவாகம் செய்ததால் தொழிலை விட்டு விலகி நன்மைகளைப் பெற்றுக்கொண்ட பெண் அங்கத்தவர்கள் | 108614 | 22708 | 22426 |
| நிரந்தர இயலாமை காரணமாக தொழிலை விட்டு விலகி நன்மைகளைப் பெற்றுக்கொண்டவர்கள் | 7513 | 978 | 1048 |
| மரணமடைந்த அங்கத்தவரது நன்மைகள் | 4672 | 4496 | 4738 |
| ஓய்வுக்கு முன்பான 30% ஊ.சே.நி. நன்மைகள் | 678 | 69482 | 33014 |
| நிரந்தர வதிவிடக் குடியகல்வின் மீதான நன்மைக் கொடுப்பனவுகள் | 13923 | 1755 | 1959 |
| அரச / மாகாண அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரிய நிரந்தர நியமனம் காரணமாக தொழிலிலிருந்து விலகியதன் மீதான நன்மைக் கொடுப்பனவுகள் | 29453 | 10133 | 13488 |
| அரசாங்கக் கூட்டுத்தானங்கள் / சபைகள் மூடப்பட்டதால் அல்லது செலவுக்குறைப்பிற்காக கம்பனிகளாக மாற்றப்பட்டதால் தொழிலிலிருந்து விலகிய ஊழியர்களுக்கான நன்மைக் கொடுப்பனவுகள் | 18165 | 108 | 2785 |

## ஊழியர் சேமலாப நிதியை ஊக்குவிப்பிற்கும் அதன் வினைத்திறன் அபிவிருத்திக்குமான முன்னேற்றங்கள்

2017 இல், ஊழியர் சேலாப நிதி பற்றிய சரியான அறிவூட்டல் இன்மையால் தோன்றக்கூடிய பிரச்சினைகளைக் குறைப்பதற்காக, அங்கத்தவர்களை அறிவூட்டுவதற்காக விளம்பரங்கள் தொலைக்காட்சியினூடாகவும் வானொலியூடாகவும் ஒளிபரப்ப, ஒலிபரப்பப் பட்டன. இதற்கு மேலதிகமாக,நடமாடும் சேவை வேலைத்திட்டங்களும் நடாத்தப்பட்டன.

## தனியார் சேமலாப நிதியத்தை மேற்பார்வை செய்தலின் முன்னேற்றம்

தனியார் சேமலாப நிதியத்திற்குப் பங்களிப்புச் செய்யும் நிறுவனங்களினதும் அதில் அங்கத்தவராக உள்ளவர்களதும் எண்ணிக்கைகள் முறையே 149 மற்றும் 192342 ஆகும். அதன் தேறிய சொத்துக்களின் பெறுமதி ரூ. 221,086,931,366.97 ஆக உள்ள அதேவேளை, தேறிய முதலீடுகளின் எண்ணிக்கை ரூ. 135,680,427,446.75 ஆகும்.

## சமூகக் கலந்துரையாடல்

தொழில் திணைக்களமானது,தொழில் சமாதானம் மற்றும் ஒற்றுமை ஊடாக பொருளாதார சுபீட்சத்தை அடைவதற்கு, தன்னை அர்ப்பணித்துள்ளது. தொழில் துறை சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்காக, தொடர்பாடல், கலந்தாலோசனை மற்றும் ஒன்றிணைந்த தீர்மானம் எடுத்தல் ஆகியவற்றின் முக்கியத்துவம் குறித்து, சமூகப் பங்காளர்களை அறிவூட்டுவது அவசியமானது. இந்த முயற்சியில், சமூகக் கலந்துரையாடலானது மிகமுக்கிய வகிபாகத்தைக் கொண்டுள்ளது.

அதன் பிரகாரம், சமூகக் கலந்துரையாடலை ஊக்குவிக்குமுகமாக, தொழில் திணைக்களம் 2017 இல் 128 சமூகக் கலந்துரையாடல் நிகழ்ச்சிகளை நடாத்தியுள்ளது.

| நிகழ்ச்சிகள் | நடாத்தப்பட்ட நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | பங்குபற்றியோரது எண்ணிக்கை |
|---|---|---|
| நிறுவனங்களிலான பயிற்சிப்பட்டறை | 60 | 2648 |
| முகாமையாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் | 10 | 407 |
| அரசசார்புத்துறை நிறுவனங்கள் | 12 | 545 |
| பிராந்திய ஆலோசனைக் குழுக்கள் | 8 | 277 |
| மாவட்ட ஆலோசனைக் குழுக்கள் | 40 | 1333 |
| மாவட்ட அலுவலகத்தின் கீழான நிறுவனங்களுக்கானது | 32 | 1155 |
| உப அலுவலகத்தின் கீழான நிறுவனங்களுக்கானது | 14 | 469 |



தொழில் திணைக்களமானது,சமூகக் கலந்துரையாடல் மற்றும் வேலைத்தலக் கூட்டுறவை ஊக்குவிப்பதற்காக நடாத்தப்படும் பல்வேறு நிகழ்ச்சிகளினதும் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்வதற்காகவும், அவற்றின் தொடர்ச்சியாகவும்,வருடாந்தம் சமூகக் கலந்துரையாடல் மற்றும் வேலைத்தலக் கூட்டுறவு பற்றிய முழு நாட்டிற்குமான போட்டிகளை நடாத்துகிறது. இவ்வாறான வருடாந்த போட்டிகள் இரு பிரிவுகளின் கீழ் நடாத்தப்படுகின்றன;அதியுச்ச அளவில் சமூகக் கலந்துரையாடல் எண்ணக்கருவை அமுல்படுத்தும் நிறுவனங்களை மதிப்பீடு செய்தலும், ஊழியர்களது ஆக்கத்திறன்களை மதிப்பீடு செய்தலும் என்ற பிரிவுகளே அவை. அதன் பிரகாரம், 2017 ஆம் ஆண்டுக்கான போட்டிகள் நடாத்தப்பட்டு வெற்றியாளர்கள் பரிசளிக்கப்பட்டனர்.






சமூகக் கலந்துரையாடல் மற்றும் வேலைத்தலக் கூட்டுறவு பற்றிய நாடு முழுவதற்குமான போட்டிகள் - 2017

மேலும், சமூகக் கலந்துரையாடல் மற்றும் வேலைத்தலக் கூட்டுறவு பற்றிய செய்தியைப் பரவச் செய்யும் நோக்கத்துடன்,வருடாந்த செய்திச் சஞ்சிகையான 'கத்திகாவ', சமூகக் கலந்துரையாடல் மற்றும் வேலைத்தலக் கூட்டுறவு பற்றிய கட்டுரைகளையும் பல்வேறு விடயங்களையும் உள்ளடக்கமாகக் கொண்டு 2017 இல் வெளியிட்டு வைக்கப்பட்டது.

# தொழில்களிலான பாதுகாப்பும் தொழிற் சுகாதாரமும்

விபத்துக்களிலிருந்தும் அனர்த்தங்களிலிருந்தும் விடுபட்ட ஒரு வேலைச்சூழலானது,வேலையாட்களது வினைத்திறனையும் உற்பத்தித் திறனையும் அதிகரிக்கும் என்பதுடன், உற்பத்திப் பொருட்களினதும் சேவைகளினதும் தரத்தையும் கூட்டும். எனவே, தொழில் திணைக்களமானது வேலைத்தலங்களில் விபத்துகள், அனர்த்தங்கள் மற்றும் தொழில் காரணமான நோய்கள் ஆகியவற்றை மிகவும் குறைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கின்றது.

2017 இல், திணைக்களத்தால் தொழிற்சாலை விபத்துக்கள் மீதும், முறைப்பாடுகள் மீதான புலனாய்வு என்ற வகையிலும் மொத்தமாக 4943 பரிசோதனைகள் நடாத்தப்பட்டன. இதற்கு மேலதிகமாக, அபாயகரமான இயந்திரங்கள் பற்றி 7530 பரிசோதனைகளும், மரணத்தை விளைவித்த விபத்துக்கள் பற்றி 68 புலனாய்வுகளும், மரணத்தை விளைவிக்காத விபத்துக்கள் பற்றி 1451 பரிசோதனைகளும் 2017 இல் மேற்கொள்ளப்பட்டன. இறப்பேற்படக்கூடியதான அதிஉயர் எண்ணிக்கையான விபத்துக்கள் கட்டிட நிர்மாணித்தல் துறையிலே அறிவிக்கப்பட்டுள்ளன. எனவே, அத்தகைய விபத்துக்களைக் குறைப்பதற்கு, வரும் வருடங்களில் தொழில் தருநர்கள் மற்றும் ஊழிர்களுக்காக விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.




ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் 28 இல் வரும் தொழிலிலான பாதுகாப்பிற்கான உலக தினத்தை அனுஷ்டிக்கு முகமாக,2017 இல், அவிசாவளை – முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் தேசிய மட்ட நிகழ்ச்சியொன்றை தொழில் திணைக்களம் ஒழுங்கு செய்தது.






தொழிலிலான பாதுகாப்பிற்கான உலக தின வைபவம் – 2017

தொழிலிலான பாதுகாப்பு வாரம் தொடர்பான இன்னொரு நிகழ்ச்சியும் 'கலதாரி' ஹோட்டலில் ஒக்தோபர் 2017 இல் நடாத்தப்பட்டது.

பின்வரும் வரைபானது, 2013 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரை தொழிலிலான பாதுகாப்பு என்பதைக் கருதி, தொழிற்சாலைகளைப் பதிவுசெய்த தரவுகளைத் தருகிறது. 31.12.2017 வரை 28854 என்ற எண்ணிக்கையிலான தொழிற்சாலைகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.




தொழில் காரணமான நோய்களை ஏற்படுத்தத்தக்க தொழிற் சூழலைப் பரிசோதிப்பதற்காக 4 சுற்றாடல் கண்காணிப்புகள் மேற்கொள்ளப்படும் அதேவேளை, தொழில் காரணமான நோய்களை அல்லது அவற்றின் அறிகுறிகளை ஆரம்பத்திலேயே கண்டறிவதற்காக 1235 உயிரியல் கண்காணிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், திணைக்களத்தால் 271 தொழிற் சுகாதார மற்றும் பாதுகாப்பு தணிக்கைப் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன.

2017 ஆம் ஆண்டினுள், தொழில் திணைக்களம் 399 அறிவூட்டல் நிகழ்ச்சிகளை, தொழிலிலான பாதுகாப்பு மற்றும் தொழிற் சுகாதாரம் ஆகியவற்றை ஊக்குவிப்பதற்காக நடாத்தியுள்ளது.



தொழிலிலான பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் குறித்து ஊழியர்களுக்கான அறிவூட்டல் நிகழ்ச்சி – புரொம்பில் தேயிலைத் தொழிற்சாலை, பெலவத்த



தொழிலிலான பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நலன்புரி பற்றிய பயிற்சிப்பட்டறை, பொலொன்னறுவை

# தொழில் தரங்கள்

தனியார் துறை ஊழியர்களது தொழிற் பாதுகாப்பு மற்றும் நலன்புரி விடயங்கள் என்பவற்றைப் பாதிக்கும் சேவை நிபந்தனைகளின் மீது தரங்களை உருவாக்குதல், அவ்வாறான தரங்களுக்கு சட்ட அந்தஸ்தை வழங்குதல் மற்றும் மேற்பார்வை ஆகியன தொழில் திணைக்களத்தின் பிரதான செயற்பாடுகளுள் அடங்கும்.

இதன் பிரகாரம், 2017 ஆம் ஆண்டில் பின்வரும் வேலைகள் நிறைவேற்றப்பட்டன:

- 12 சம்பளச் சபைகளுக்கு உரிய பிரதிநிதிகளை நியமித்தலும் அவற்றை புதினப் பத்திரிகைகளில் வெளியிடலும்.
- உணவுச் சாலை மற்றும் உணவு வழங்கல் தொழிலுக்கான சம்பளச்சபையால் உள்ளடக்கப்படும் வேலையாட்கள் பற்றி இரண்டு சுற்றுக்கள் கலந்துரையாடல் நடத்துதல்.
- கப்பல் துறை, துறைமுகம், கப்பற் போக்குவரத்துத் தொழில் பற்றிய கட்டளையை புதினப் பத்திரிகைகளில் வெளியிடல்.
- உரிய குழுவினது தீர்மானங்களுக்கு அமைவாக, வரவுசெலவுத் திட்ட நிவாரணப் படி மற்றும் ஆகக்குறைந்த சம்பளங்கள் ஆகியன மீதான முறைப்பாடுகளுக்குப் பதிலளித்தல்.
- 5 வேலை நாட்கள் கொண்ட வாரத்தை அமுல்படுத்துவதற்கான அங்கீகாரத்தை 200 தொழில்தருநர்களுக்கு வழங்குதல்.
- 33 கூட்டு உடன்படிக்கைகளின் சட்டப்படியான செல்லுபடியாகும் தன்மையைப் பரிசோதித்தல்.
- 2016 இன் 03 ஆம் இலக்க வேலையாட்களின் தேசிய ஆகக் குறைந்த சம்பளச் சட்டம் மற்றும் 2016 இன் 04 ஆம் இலக்க வரவுசெலவுத் திட்ட நிவாரணப் படிச் சட்டம் ஆகியன பற்றி அறிவூட்டலுக்கான சிறு பிரசுரங்களை அச்சிடுதல்.
- மலர்கள், அலங்காரத் தாவரங்கள், காய்கறி, பழங்கள் பயிரிடுதல் மற்றும் ஏற்றுமதித் தொழில் பற்றிய ஆட்சேபணைகளை புதினப் பத்திரிகைகளூடாகக் கோருதல்.
- கொக்கோ, ஏலம், மிளகு பயிரிடுதல் உற்பத்தித் தொழிலுக்கான வாழ்க்கைச் செலவுப் படியை புதினப் பத்திரிகைகளூடாக வெளியிடுதல்.

31.12.2017 இல் இலங்கையில் செயற்பாட்டிலிருந்த சம்பளச்சபைகளின் பட்டியல் பின்வருமாறு:

| சம்பளச்சபை |
| --- |
| **பெருந்தோட்டப் பிரிவு** |
| 01 - தேயிலை பயிரிடல் மற்றும் உற்பத்தித் தொழில் |
| 02 - கொக்கோ, ஏலம், மிளகு பயிரிடுதல் உற்பத்தித் தொழில் |
| 03 - இறப்பர் பயிரிடல் மற்றும் உற்பத்தித் தொழில் |
| 04 - தென்னை பயிரிடல் தொழில் |
| **தயாரித்தல் பிரிவு** |
| 05 - பொறியியல் தொழில் |
| 06 - அச்சிடல் தொழில் |
| 07 - தேயிலை ஏற்றுமதித் தொழில் |
| 08 - இறப்பர் ஏற்றுமதித் தொழில் |
| 09 - மதுபானம், விநாகிரி உற்பத்தித் தொழில் |
| 10 - தீப்பெட்டி உற்பத்தித் தொழில் |
| 11 - தெங்கு உற்பத்தித் தொழில் |
| 12 - கட்டிடத் தொழில் |

| |
|---|
| 13 - போறணைத் தொழில் |
| 14 - ஐஸ், குளிர்பானம், பழச்சாறு உற்பத்தித் தொழில் |
| 15 - செங்கல் மற்றும் ஓடு உற்பத்தித் தொழில் |
| 16 - தும்பு மெத்தை, சிலிர்த்த தும்பு ஏற்றுமதித் தொழில் |
| 17 - ஆடை உற்பத்தித் தொழில் |
| 18 - மேசு வகை உற்பத்தித் தொழில் |
| 19 - நெல்குற்றும் தொழில் |
| 20 - துணி உற்பத்தித் தொழில் |
| 21 - விசுக்கோத்து, இனிப்பு வகைகள் உற்பத்தித் தொழில் |
| 22 – இறப்பர் (ரயர், ரியூப் உற்பத்தி, ரயர் மீளப் புனைதல் உட்பட) பிளாஸ்ரிக், பெற்றோலியம் றெசின் பொருட்கள் உற்பத்தித் தொழில் |
| 23 –தோல் பதனிடுதலும் பாதணிகள் மற்றும் தோற் பொருட்கள் உற்பத்தித் தொழில் |
| 24 - மட்பாண்டப் பொருட்கள் உற்பத்தித் தொழில் |
| 25 - இறால் வளர்ப்பு மற்றும் இறால் ஏற்றுமதித் தொழில் |
| 26–கற்குழி மற்றும் கருங்கல் உடைக்கும் தொழில் |
| 27 - காரீயத் தொழில் |
| 28 - கறுவாத் தொழில் |
| 29 - புகையிலைத் தொழில் |
| **சேவைப் பிரிவு** |
| 30 - மோட்டார் போக்குவரத்துத் தொழில் |
| 31 - சினிமாத் தொழில் |
| 32 - ஆதுாலர் மனைத் தொழில் |
| 33 - உணவுச் சாலை மற்றும் உணவு வழங்கல் தொழில் |
| 34 - பாதுகாப்புச் சேவைத் தொழில் |
| 35 - பத்திரிகையாளர் தொழில் |
| 36 - சில்லறை மற்றும் மொத்த விற்பனைத் தொழில் |
| 37 - கப்பல் துறை, துறைமுகம், கப்பற் போக்குவரத்துத் தொழில் |
| 38-சுத்தீகரிப்புச் சேவைத் தொழில் |
| **தொழில் ஆணையாளர் அதிபதியின் தீர்மானங்கள்** |
| 39 - பத்திக் தொழில் |
| 40 - கண்ணாடிப் பொருட்கள் உற்பத்தித் தொழில் |
| 41 - ஆரம்பப் பாடசாலைச் சேவைத் தொழில் |
| 42-பீடி உற்பத்தித் தொழில் |
| 43 –சுருட்டு உற்பத்தித் தொழில் |
| 44 - மலர்கள், அலங்காரத் தாவரங்கள், காய்கறி, பழங்கள் பயிரிடுதல் மற்றும் ஏற்றுமதித் தொழில் |

# தொழில் செய்யும் பெண்களின் உரிமைகளைப் பாதுகாத்தலும் சிறுவர் தொழிலை ஒழித்தலும்

இலங்கையின் உற்பத்திச் செயற்பாட்டில் ஒரு முக்கித்துவம் மிக்க வகிபாகத்தை தொழில் செய்யும் பெண்கள் கொண்டிருக்கிறார்கள். பெண்களின் தொழில்சார் உரிமைகள், பாதுகாப்பு, சுகாதார மற்றும் நலன்புரி வசதிகளைப் பெற்றுத்தருதல் போன்ற விடயங்களில் கவனஞ்செலுத்துதல் தொழில் திணைக்களத்தின் பொறுப்பாகும். இதேபோல எமது நாட்டின் இரத்த ஓட்டமான பிள்ளைகளைப் பாதுகாப்பதற்காக சிறுவர் தொழிலை ஒழித்தலும் திணைக்களத்தின் பாரிய பொறுப்பாகும்.

இதன் பிரகாரம்,2017 ஆம் ஆண்டினுள், தொழில் திணைக்களமானது தொழில் செய்யும் பெண்களது பாதுகாப்பிற்காக பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபட்டது:

- ✓ ‘கொக்கல’ முதலீட்டு ஊக்குவிப்பு வலய ஊழியர்களான 400 பெண்களுக்கு வழிகாட்டலும் ஆலோசனையும் வழங்கப்பட்டு,சர்வதேச பெண்கள் தினம் கொண்டாடப்பட்டது.
- ✓ பெருந்தோட்டத்துறையைச் சேர்ந்த பெண் தொழிலாளர்களுக்கான மூன்று கருத்தரங்குகளும், தொழிற்சாலைகளில் பணியாற்றும் பெண்ஊழியர்களை அறிவூட்டுவதற்கான ஒன்பது சேவைக்கால ஆலோசனைக் கூட்டங்களும் நடாத்தப்பட்டன. மேலும், இரு மனவள/யோகாஆலோசனை நிகழ்ச்சிகளும் மற்றும் பால்வினை நோய்கள் பற்றிய நான்கு அறிவூட்டல் கூட்டங்களும் ‘கட்டுநாயக்க, பியகம, கொக்கல’ முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களின் பெண் ஊழியர்களுக்கு நடாத்தப்பட்டன.
- ✓ போதை மருந்துத் தடுப்பு பற்றிய சம்பந்தப்பட்ட எட்டு நிகழ்ச்சிகள், சுதந்திர வர்த்தக வலயத்தில் தங்கி வேலைசெய்யும் பெண் ஊழியர்களிடையே அறிவூட்டலை ஏற்படுத்தும் நோக்கில் நடாத்தப்பட்டன.
- ✓ சிறு தேயிலைத் தோட்டங்களிலும் விவசாயத் துறையிலும் பணியாற்றும் பெண்கள் தமக்கு மேலதிக வருமானத்தைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக அவர்களுக்கு சுய தொழில் வாய்ப்புகள் பற்றிய பயிற்சி நிகழ்ச்சிகள் நான்கு நடாத்தப்பட்டன.
- ✓ தொழில்புரியும் பெண்களின் பிள்ளைகளது பாதுகாப்பை உறுதிப்படுத்துவதை நோக்காகக் கொண்டு,வேலை நேரங்களில் பிள்ளைகளைக் கவனித்துக்கொள்ளும் நிலையங்களை அமைப்பதற்கு உதவுமுகமாக 19 நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. இதனூடாக தொழிற் துறையில் பெண்களது பங்களிப்பு மேலும் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.
- ✓ 62 ஒருங்கிணைந்த பரிசோதனைகள், தொழிற்சாலைகளில் பெண்களுக்கான இரவு நேர வேலைக்கான அங்கீகாரத்தை வழங்குவதற்கு முன்னோடியாக நடாத்தப்பட்டன.

தொழில் திணைக்களமானது, 2017 இல், நாட்டின் இரத்த ஓட்டமாகக் கருதப்படும் பிள்ளைகளது உரிமைகளைப் பாதுகாப்பதனை நோக்காகக்கொண்டு, பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபட்டது:

- ✓ ஒவ்வொரு வருடமும் ஒக்தோபர் முதலாம் திகதியன்று வரும் உலக சிறுவர் தினம் 2017 ஆம் ஆண்டின் அதே தினத்தன்று, ‘வெலிமடை’ப் பிரிவைச் சேர்ந்த 10 பாடசாலைகளைச் சேர்ந்த 50 பிள்ளைகளது பங்குபற்றலுடன் அனுஷ்டிக்கப்பட்டது. அறிவூட்டும் வினாவிடைப் போட்டி, பாடல் போட்டி,உளச்சார்பு தொடர்பான போட்டிகள், தொடர் ஓட்டப் போட்டிகள் போன்ற போட்டிகள் அவர்களுக்கிடையே நடாத்தப்பட்டு வெற்றிபெற்றவர்களுக்கும் பங்குபற்றியோருக்கும் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.
- ✓ இவ்வருடம் சிறுவர் தொழிலுக்கு எதிரான உலக தினத்தைக் கொண்டாடுவதற்கு நடவடிக்கையேதும் எடுக்கப்படவில்லை. ஆயினும், அபாயகரமான தொழில்களில் ஈடுபடத்தக்க நிலைமையை எதிர்நோக்குபவர்கள் எனக் கருதப்படும், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்களைச் சென்றடையுமுகமாக, சிறுவர் தொழிலை ஒழிப்பதன்

அவசியத்தை வலியுறுத்தும் செய்திகள் அச்சிடப்பட்ட 'பயிற்சிப் புத்தகங்கள்' பாடசாலைகளூடாக விநியோகிக்கப்பட்டன.

- ✓ பாடசாலைப் பிள்ளைகளுக்கான 29 அறிவூட்டும் நிகழ்ச்சிகள்,பல்வேறு சமூகக் காரணிகளாலும் பொருளாதாரக் கஷ்டங்களாலும் அவர்கள் பாடசாலையை விட்டு இடைவிலகுதலைத் தடுத்தல் மற்றும் 18 வயதுக்குட்பட்டோர் பாடசாலைக் கல்வியை விட்டு வேலைகளுக்குச் செல்லுதலைக் கட்டுப்படுத்துதல் ஆகிய இரட்டை நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு, இலங்கையில் சிறுவர் தொழிலைப் பூச்சிய மட்டத்திற்குக் கொண்டுவருதல் எனும் நோக்கத்திற்கு வலு சேர்க்குமுகமாக நடாத்தப்பட்டன.
- ✓ தொழில் அலுவலர்களுக்கு சிறுவர் தொழில் தொடர்பான சட்டங்களை அமுல்படுத்துவதில் உதவி புரியும், பொலிஸ் நிலையங்களில் பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரங்களைக் கவனிக்கும் பொலிஸ் அலுவலர்கள், சிறுவர் நன்நடத்தை அலுவலர்கள், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பிராந்திய அலுவலர்கள், சிறுவர் உரிமைப் பாதுகாப்பு அலுவலர்கள், கிராம அலுவலர்கள் ஆகியோரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துமுகமாக இரு விசேட பயிற்சிப் பட்டறைகள் நடாத்தப்பட்டன.
- ✓ மூன்று நடமாடும் சேவை நிகழ்ச்சிகள்,இரத்தினபுரி மாவட்டத்தை உள்ளடக்கி,இரத்தினபுரி புனித. ஜோக்கிம் வித்தியாலயம், கஹவத்த தமிழ் வித்தியாலயம், இரத்தினபுரி பத்பேரிய நாரத மத்திய கல்லூரி ஆகிய இடங்களில், சர்வதேச தொழில் தாபனத்தின் அனுசரணையுடன் நடாத்தப்பட்டன.
- ✓ 'சிறுவர்களது பொருளாதாரச் செயற்பாடுகள் பற்றிய அளவீடு (2015/2016)' பற்றிய இறுதி அறிக்கையின் வெளியீடு ஊடகங்களுக்கான விசேட அறிவூட்டலுடன் சேர்த்து, ஒரு கலந்துரையாடலாக 'வெள்ளவத்தை, குளோபல் டவர்ஸ் ஹோட்டலில்' நடாத்தப்பட்டது. இதில் தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்ரகமுவ அபிவிருத்தி அமைச்சர், அமைச்சின் செயலாளர், தொழில் ஆணையாளர் அதிபதி, சர்வதேச தொழில் தாபன அலுவலர்கள்,தொழில் திணைக்கள பதவிநிலை அலுவலர்கள், தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்கள அலுவலர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் ஆகியோர் இந்த நிகழ்வில் பங்குகொண்டனர்.

## விசேட புலனாய்வுகள்

வழமையான தொழிற் பரிசோதனைகளுக்கும் முறைப்பாடுகளுக்கான பரிசோதனைகளுக்கும் மேலதிகமாக, தொழில் சட்டங்களையும் உபவிதிகளையும் அமுல்படுத்துவதற்கும் அவசரமான தொழிற் பரிசோதனைகளை விரைவுபடுத்துவதற்கும் விசேட புலனாய்வுகளை மேற்கொள்வதற்கும் தொழில் திணைக்களத்தில் ஒரு விசேட புலனாய்வுகள் பிரிவு தாபிக்கப்பட்டுள்ளது.

இதன்படி,2017 ஆம் ஆண்டினுள் 420 முறைப்பாடுகளுக்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு,ரூ. 198,184,397.89 வரையான நிலுவைத் தொகை கணக்கிடப்பட்டது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, பொது முறைப்பாட்டுக் குழு, ஜனாதிபதி அலுவலகம், பிரதம மந்திரி அலுவலகம் போன்ற பல்வேறு நிறுவனங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற 52 முறைப்பாடுகளுக்கான தொழிற் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. 100 இற்கும் அதிகமான ஊழியர்களைக் கொண்ட 16 நிறுவனங்கள் (தெரிவுசெய்யப்பட்ட துறைகளிலிருந்து) பரிசோதிக்கப்பட்டன.

# நிர்வாகம்

## பௌதிக வளங்களின் நிர்வாகம்

திணைக்களத்தின் உட்கட்டமைப்பை உயர்த்துவது தொழில் திணைக்கள அலுவலர்கள் தமது கடமைகளை வினைத்திறனாகவும் பயனுறுதி மிக்கதாகவும் மேற்கொள்வதற்கு அவசியமானது.

அதன் பிரகாரம்,‘‘மெஹவர பியச’’ என்ற பாரிய கட்டிடமானது தொழில் திணைக்களத்திற்கு உரித்தான காணியில் கட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த நோக்கத்திற்காக 2017 இல் செலவிடப்பட்ட தொகை ரூ. 2133.75 மில்லியன்களாகும். 31.12.2017 இல் இந்தக் கட்டிடத்தின் பௌதிக முன்னேற்றமானது 67.92 சதவீதமாகும்.

அவிசாவளை மற்றும் நீர்கொழும்பு தொழில் அலுவலக கட்டிடங்களின் நிர்மாண வேலைகள் இவ்வாண்டில் பூர்த்தி செய்யப்பட்டதுடன் தற்பொழுது இரு அலுவலகங்களும் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்பிடங்கள் ஆகப் பராமரிக்கப்படுகின்றன.



மாவட்ட தொழில் அலுவலகம், அவிசாவளை



மாவட்ட தொழில் அலுவலகம், குருணாகலை



மாவட்ட தொழில் அலுவலகம், புத்தளம்



உப தொழில் அலுவலகம், அம்பலாங்கொடை

தொழில் அலுவலக கட்டிடங்களது கட்டிட வேலைகளின் முன்னேற்றம் பின்வருமாறு:

| செயற்பாடு | 31.12.2017 இல் முன்னேற்றம் | |
|---|---|---|
| | பௌதிக | நிதி (ரூ. மில்லியன்) |
| "மெஹவர பியச" | 67.92% | 2133.80 |
| அவிசாவளை | 100% | - |
| நீர்கொழும்பு | 100% | - |
| பொலொன்னறுவை | கட்டம் 03 - 100% | - |
| குருணாகலை | கட்டம்02 - 30% | 61 |
| புத்தளம் | கட்டம்03 - 98% | 15 |
| அம்பலாங்கொடை | கட்டம்02 - 20% | 21 |
| அனுராதபுரம் | கட்டம்02 - 100% | 3.447 |
| மகியங்கனை | கட்டம்02 - 50% | 21 |
| இரத்தினபுரி | 3% | 24.99 |
| பதுளை | 2% | 24.79 |
| ஹற்றன் | 2% | 14.98 |
| நாவுல | 2% | 0.014 |
| வவுனியா | 2% | 0.023 |

**மனிதவள முகாமைத்துவம்**

ஆளணியினரை ஆகக்கூடிய மட்டத்தில் பேணும்போதே திணைக்களத்தின் கடமைகள் வினைத்திறனாகவும் பயனுறுதி மிக்கதாகவும் மேற்கொள்ளப்பட முடியும். இந் நோக்கத்திற்காக மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் பின்வருமாறு:

- தொழில்நுட்ப சேவை ஆட்சேர்ப்புச் செயன்முறைக்காக பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுதல்.
- இலங்கை விஞ்ஞான சேவையைச் சேர்ந்த ஆராய்ச்சி அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துக்கு விண்ணப்பித்தல்.
- தொழில் ஆணையாளர் (தொழிலுக்கான பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்) பதவிக்குரிய ஆட்சேர்ப்புச் செயன்முறைக்கான பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துக்கு விண்ணப்பித்தல்.
- 04 சட்ட அலுவலர்,179தொழில் அலுவலர்,05 சுருக்கெழுத்தாளர், 17வாகனச் சாரதி,20 சிற்றூழியர் மற்றும் மின்னியலாளர் ஆகிய பதவி வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு செய்யப்பட்டது.
- பதவிநிலை அலுவலர்களது (1A, 1B, 2, 3, 17) செயற்றிறன் மதிப்பீட்டைக் கோருதல்
- சீருடைக்கான படி (காவலாளர்கள், வாகனச் சாரதிகள், சிற்றூழியர்கள், மற்றும் ஏனைய வகுதி ஊழியர்கள் ஆகியோருக்கு)
- வருடாந்த சம்பள உயர்ச்சிகளை வழங்குதல்
- ஓய்வு பெறுவோரது கோவைகளைத் தயாரப்படுத்துதல்
- உதவித் தொழில் ஆணையாளர்கள், இலங்கை பொறியில் சேவை அலுவலர்கள், தொழில் அலுவலர்கள், மனிதவள அபிவிருத்தி அலுவலர்கள், வாகனச் சாரதிகள், சிற்றூழியர்கள் ஆகியோருக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைகளை நடாத்துதல்.

- தேவைக்கேற்ப, மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு மற்றும் பொது முறைப்பாட்டுக் குழுவிற்கு அறிக்கையிடுதல்.
- வருட மத்தி (வருடாந்த) செயற்றிறன் மதிப்பீட்டைக் கோருதல்.
- சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய அறிக்கைகளைக் கோருதல்.
- பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை 03/2016 இன் பிரகாரம் சம்பளங்களை மாற்றுதல்.
- திணைக்கள மறுசீரமைப்பு அறிக்கையின் சிபார்சுகளை நடைமுறைப்படுத்துவதற்கான அடிப்படைச் செயற்பாடுகள்.

**நூலக மற்றும் தகவல் சேவை**

திணைக்கள நூலகமானது, தொழில்கொள்வோர்-தொழிலாளர் சமூகத்தின் முன்னேற்றத்திற்குப் பொருத்தமானதென இனங்காணப்பட்ட தேவைகளுக்குப் பொருந்தக்கூடிய தகவல்களைச் சேரித்தல்,அத் தேவைகளுக்குரிய அறிவை மேலும் விரிவாக்குவதற்குரிய பாதை அமைத்தல், தொழில் துறை தொடர்பான அறிவை தொழில் திணைக்களத்தின் ஊழியரிடையேயும் பொது மக்களிடையேயும் பரப்புதல் ஆகிய இலக்குகளுடன் பேணப்படுகிறது.இதற்கமைய, இந்த வருடத்தினுள், வாசகர்களின் அறிவை, கிரகித்தலை, பாராட்டுக்களை உயர்த்தும் நோக்கில், 173 புத்தகங்களும் சஞ்சிகைகளும் புதிதாகக் கொண்டுவரப்பட்டன.

மேலும், திணைக்களமானது ஒரு தொழில் நூதனசாலையைப் பேணுவதுடன், அந் நூதனசாலையில் தொழில் துறையின் ஆரம்பம், மாற்றங்கள் மற்றும் இலங்கையின் தொழில் துறைக்குரிய பழைய கட்டளைச்சட்டங்கள், சட்டங்கள், ஆவணங்கள் போன்றன காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.



தொழில் நூதனசாலை

## மேற்பார்வையினதும் மீளாய்வினதும் முன்னேற்றங்கள்


தொழில் திணைக்களத்தின் எல்லாப் பிரிவுகளுக்கும், எல்லா மாவட்ட / உப தொழில் அலுவலகங்களுக்கும் உரிய வருடாந்த செயற்றிட்டம் தயாரிக்கப்பட்டு, அதன் முன்னேற்றம் மாதந்தோறும், மூன்று மாதங்களுக்கொருமுறை மேற்பார்வை செய்யப்படுகிறது.

2017 இல், தொழில் அலுவலகங்களது முன்னேற்றத்தை மேற்பார்வை செய்வதற்காக, பிராந்திய மட்டத்தில் ஆறு முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. மேலும்,பிராந்திய அலுவலகங்களுக்குப் பொறுப்பான அலுவலர்களுக்கு 03 கருத்தரங்குகளும் நடாத்தப்பட்டன.

''லீசா''LISA (Labour Inspection System Application) என்னும் தொழில் பரிசோதனை முறைமையானது, தொழில் அலுவலர்களால் மேற்கொள்ளப்படும் தொழிற் பரிசோதனைகள், அலுவலகங்களால் பெறப்படும் முறைப்பாடுகள், நீதிமன்ற வழக்குகள் ஆகியன பற்றிய தகவல்களைக் கணனிமயப்படுத்துவதால் உருவாகும் தரவு முறைமையைப் பேணுவதற்காக, இவ்வருடத்தினுள் நாளதுவரைப்படுத்தப்பட்டது. மாவட்ட அலுவலகங்களில் 'லீசா'வை உபயோகிக்கும் முறையைப் பழகிக்கொள்ளும்போது ஏற்படும் இணையம் மற்றும் கணனிகள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள், அதனை உபயோகிக்கும்போது ஏற்படும் சிக்கல்களைத் தீர்த்துக் கொள்ளுதல், முறைப்பாட்டுப் பதிவேடு மற்றும் நீதிமன்ற வழக்குகளின் பதிவேட்டைப் பேணுதல் ஆகிய விடயங்கள் பற்றி, உரிய அலுவலகங்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டன. இதற்கமைவாக உரிய அலுவலர்களுக்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

அலுவலர்களது செயற்பாட்டை நாளதுவரைப்படுத்துமுகமாக பல்வேறு பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

| நிகழ்ச்சி | நடாத்தப்பட்ட நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை |
|---|---|
| பதவிநிலை அலுவலர்களின் பயிற்சி | 6 |
| முகாமைத்துவ உதவியாளர்களுக்கான பயிற்சி | 18 |
| கணனிப் பயிற்சி | 14 |
| பட்டப் பின்படிப்பு மற்றும் டிப்ளோமா கற்கைகளுக்கான அனுசரணை | 80 |
| வெளிவாரியான பயிற்சிகள் | 24 |
| வேறு பயிற்சி நிகழ்ச்சிகள் | 5 |
| வெளிநாட்டுப் பயிற்சிகள் | 6 |
| புதிதாக ஆட்சேர்க்கப்பட்ட தொழில் அலுவலர்களுக்கான ஆரம்பப் பயிற்சிகள் | 1 |





இந்த வருடத்தினுள் நடாத்தப்பட்ட பயிற்சிகள் பற்றிய புகைப்படங்கள்

## நிதி முகாமைத்துவம்

நிதி வளங்களை வினைத்திறனாகவும், உற்பத்தித்திறனாகவும், சிக்கனமாகவும் 2017 ஆம் ஆண்டினுள் தொழில் திணைக்களத்தால் பயன்படுத்தக் கூடியதாக இருந்தது.

நிதி முகாமைத்துவத்திற்காகப் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன:

- திணைக்களத்தின் கொள்வனவுத் திட்டத்தைத் தயாரித்தலும் நடைமுறைப்படுத்தலும்.
- கொள்வனவுச் செயன்முறையூடாகப் பெறப்படும் பொருட்களினதும் சேவைகளினதும் முறையான விநியோகம்.
- உப அலுவலகங்களுக்கான கட்டுநிதியை வழங்குதலும், நிதி மேற்பார்வையும்.
- மாதாந்த, அரையாண்டு, மற்றும் ஆண்டுக்குரிய கணக்குகளைத் தயாரித்தலும், உரிய தரப்பினருக்கு அவற்றை உரிய திகதிகளில் சமா்ப்பித்தலும்.
- சட்டத்தின் பிரகாரம், வெளித்தரப்பாரிடமிருந்து கிடைக்கும் கொடுப்பனவுகள், செலுத்துகைகள் மற்றும் பற்றுச் சீட்டுகள் ஆகியவற்றை ஒழுங்கமைத்தல்.
- திணைக்களத்திற்குச் சொந்தமான சொத்துக்களின் கணக்கெடுப்பும் அநாவசியமான சொத்துக்களை அகற்றுதலும்.
- திணைக்கள அலுவலா்களது சம்பளங்கள், கடன் முற்பணங்கள், மற்றும் ஏனைய படிகள் ஆகியவற்றைச் செலுத்துதல்

2017 ஜனவரி முதல் டிசம்பர் வரையான, திணைக்களத்தின் நிதிக் கையாளுகை

| நிகழ்ச்சித்திட்டம் | செலவீனத்தின் வகை | 2017 இற்கான ஏற்பாடு (ரூ) | 2017 டிசம்பர் 31 இற்கான செலவு |
|---|---|---|---|
| 221 | மீண்டுவரும் | 1,505,256,000 | 1,451,795,889.23 |
| | மூலதன | 3,607,300,000 | 2,503,986,516.61 |

மூலதனச் செலவினத்தின் வகுப்பாக்கம்

| செலவீனத்தின் வகை | ஏற்பாடு – வரவுசெலவுத்திட்டம் 2017 | ஏற்பட்ட செலவு 2017 | ஏற்பட்ட செலவின் சதவீதம் |
|---|---|---|---|
| மூலதனச் சொத்துக்களின் செம்மையாக்குதலும் புனரமைத்தலும் | 57,400,000.00 | 48,032,220.55 | 84% |
| மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | 3,526,250,000.00 | 2,387,686,957.42 | 68% |

மீண்டுவரும் செலவினத்தின் வகுப்பாக்கம்

| செலவீனத்தின் வகை | ஏற்பாடு – வரவுசெலவுத்திட்டம் 2017 | ஏற்பட்ட செலவு 2017 | ஏற்பட்ட செலவின் சதவீதம் |
|---|---|---|---|
| தனிப்பட்ட சம்பளங்கள் | 1,174,700,000.00 | 1,134,858,706.99 | 97% |
| பிரயாணச் செலவுகள் | 61,700,000.00 | 60,568,532.90 | 98% |
| வழங்கல்கள் | 55,291,000.00 | 48,684,156.32 | 88% |
| பேணல் சேவைகள் | 13,143,000.00 | 11,868,679.55 | 90% |
| கட்டுமானங்கள் | 1,770,000.00 | 1,415,213.74 | 80% |
| ஏனைய சேவைகள் | 174,064,000.00 | 169,914,384.92 | 98% |
| இடமாற்றுதல்கள் | 24,562,000.00 | 24,462,898.81 | 100% |
| ஏனையவை | 26,000.00 | 23,316.00 | 90% |
| மொத்தம் | 1,505,256,000.00 | 1,451,795,889.23 | 96% |

## தொழில்கள்சார் துறை தொடர்பான புள்ளிவிபரங்களைப் பிரசுரித்தல்

இலங்கையின் தொழில்கள்சார் துறையில் ஏற்படும் சிக்கலான மாற்றங்களை ஆராயும் அதேவேளை சரியான தகவல்களினதும் புள்ளிவிபரங்களினதும் சேகரிப்பு,அவற்றின் பகுப்பாய்வு மற்றும் எதிர்வுகூறல்ஆகியன தொழில் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கமைய பின்வரும் செயற்பாடுகள் 2017 இல் மேற்கொள்ளப்பட்டன:

- வருடாந்த வேலைவாய்ப்பு அளவீடு அறிக்கை 2016

  அச்சிட்டும் இணையத் தளத்திலும் வெளியிடப்பட்டது.
- வருடாந்த வேலைவாய்ப்பு அளவீடு 2017

  2017 அளவீட்டின் தரவுகள் இன்னும் கணனிமயப்படுத்தப்படுகின்றன.
- தொழிற் புள்ளிவிபரங்களின் வருடாந்த வெளியீடு 2016

  அச்சிடுவதற்கும் இணையத் தளத்தில் வெளியிடுவதற்கும் தயாராக உள்ளது.
- இலங்கைத் தொழிற் செய்திமடல் காலாண்டு வெளியீடு 2017

  வேறு நிறுவனங்களிலிருந்து தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.
- பொதுவான சம்பாத்தியங்களும் வேலை செய்யும் மணித்தியாலங்களும் பற்றிய அளவீட்டு அறிக்கை - 2017

  2017 மார்ச் அளவீடு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. செப்தெம்பர் மாத தரவுகள் இன்னும் பெறப்பட வேண்டியுள்ளது.
- ஆகக் குறைந்த சம்பள வீதத்தைக் கணக்கிடுதல்

  சம்பளச்சபைகளின் பிரகாரம் ஆகக்குறைந்த சம்பள வீதங்கள் ஒக்தோபர் மாதம் வரை கணக்கிடப்பட்டுள்ளன.
- ஊ.சே.நி. யின் புதிய பதிவுகளைக் கணனிமயப்படுத்துதல்

  ஊ.சே.நி.யின்பெற்றுக்கொள்ளப்பட்ட விபரங்கள் கணனிமயப்படுத்தப்பட்டுள்ளன.

## தகவல் தொழில்நுட்ப விவகாரங்கள்

இலங்கைப் பொது வலையமைப்பை ஆரம்பிப்பதற்கான ஆரம்ப கட்ட வேலைகள் 2017 இல் எடுத்துக் கொள்ளப்பட்டன. மேலும், திணைக்கள இணையத்தளம் மூலம் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகள் முன்னேற்றப்பட்டன.



தொழில் திணைக்களத்தின் பிரிவுகளது தலைமை அலுவலர்கள் (31.12.2017 இல்)

| | பிரிவு | பதவி | பெயர் |
|---|---|---|---|
| 1 | தொழில் ஆணையாளர் அதிபதி | | திரு. ஏ. விமலவீர |
| 2 | மேலதிக தொழில் ஆணையாளர் அதிபதி (நிர்வாகம்) | | திரு. சி.என். விதானாச்சி |
| 3 | மேலதிக தொழில் ஆணையாளர் அதிபதி (திணைக்கள) | | திரு. பி.எஸ். பத்திரத்ன |
| 4 | மேலதிக தொழில் ஆணையாளர் அதிபதி (பொறியியல்) | | திரு. டபிள்யு. ஐ. சி. டி. ஆர். பெர்னான்டோ |
| 5 | நிர்வாகப் பிரிவு | தொழில் ஆணையாளர் | திரு. ஜி. டி. டபிள்யு. ஜயவர்தன |
| 6 | தொழில் உறவுகள் பிரிவு | தொழில் ஆணையாளர் | திரு. கே. டி. மனோஜ் பிரியந்த |
| 7 | ஊழியர் சேமலாப நிதிப் பிரிவு | தொழில் ஆணையாளர் | திரு. டி. பி. கே. ஆர். வீரக்கோன் |
| 8 | சட்ட அமுலாக்கல் பிரிவு | தொழில் ஆணையாளர் | திரு. டி. எம். கருணாரத்ன |
| 9 | திட்டமிடல், பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள் பிரிவு | தொழில் ஆணையாளர் | திரு. டி. பி. கே. ஆர். வீரக்கோன் |
| 10 | விசேட புலனாய்வுகள் பிரிவு | தொழில் ஆணையாளர் | திரு. பி. டபிள்யு. எம். ஜி. விக்ரமரத்ன |
| 11 | தொழில் தரங்கள் பிரிவு | தொழில் ஆணையாளர் | திரு.ஜனக பரணமான |
| 12 | மனிதவள அபிவிருத்திப் பிரிவு (சமூகக் கலந்துரையாடல் மற்றும் வேலைத்தலக் கூட்டுறவு அலகு) | தொழில் ஆணையாளர் | திருமதி. எல். டி. சித்ரா ஜயசீலி |
| 13 | பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரப் பிரிவு | தொழில் ஆணையாளர் | திரு. பி. மகாதேவா |
| 14 | தொழில்சார் பாதுகாப்புப் பிரிவு | தொழில் ஆணையாளர் | திரு. டபிள்யு. ஐ. சி. டி. ஆர். பெர்னான்டோ |
| 15 | நிதிப் பிரிவு | தலைமைக் கணக்காளர் | செல்வி. டி. கே. டி. பி. லக்மாலி |
| 16 | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு | தலைமைக் கணக்காய்வாளர் | திரு. ஐ. எல். சோமசிறி |
| 17 | தொழில்சார் சுகாதாரப் பிரிவு | பிரதித் தொழில் ஆணையாளர் | கலாநிதி. வஜிர பலிப்பான |
| 18 | புள்ளிவிபரப் பிரிவு | பிரதிப் பணிப்பாளர் (புள்ளிவபரம்) | திரு. டி. வீரவர்ண |
| 19 | கட்டுமான மற்றும் கட்டிடப் பராமரிப்புப் பிரிவு | பொறியியலாளர் (கட்டிடங்கள்)<br>பொறியியலாளர்(சிவில்)<br>பொறியியலாளர்(மின்சாரம்) | திரு. ஆர். ஜே. அபயசிறிவர்தன<br>திருமதி. ஜி. எச். ஆர். எஸ். ஃ. சில்வா<br>திருமதி. எச். எல். எல். தம்மிகா |
| 20 | நூலகம் | நூலகர் | திருமதி. ரேணுகா குமாரி ஜயவர்தன |

பிராந்திய தொழில் அலுவலகங்கள்

| | பிராந்திய தொழில் அலுவலகம் | 31.12.2017 இல் பிராந்திய அலுவலகங்களுக்குப் பொறுப்பாக இருந்த பிரதித் தொழில் ஆணையாளரது பெயர் |
|---|---|---|
| 1 | மேற்கு 1 | திரு. எல். ரி. ஜி. டி. தர்ஷன |
| 2 | மேற்கு 11 | திரு. ஆர். டபிள்யு. எம். பொடிநிலமே |
| 3 | மேற்கு 111 | திருமதி. என். எம். வை. துஷாரி |
| 4 | சப்ரகமுவ | திரு. ஜி. பி. எஸ். லியனகே (வேலையைக் கவனித்தல்) |
| 5 | வட மேற்கு | திரு. டபிள்யு. எம். எஸ். பண்டார |
| 6 | மத்திய | திருமதி. ஜே. கே. போகஹவத்த |
| 7 | தெற்கு | திரு. டபிள்யு. டபிள்யு. புஞ்சிஹேவா |
| 8 | ஊவா | திருமதி. ஆர். என். விக்ரமஆராச்சி (வேலையைக் கவனித்தல்) |
| 9 | வட மத்திய | திரு. டி. எம். ஜி. வீரசிங்க (வேலையைக் கவனித்தல்) |
| 10 | வடக்கு | திருமதி. என். ஜெகதீஸ்வரன் (பதில்) |
| 11 | கிழக்கு | திரு. கே. எம். ஆர். எல். ஜயதிலக |

மாவட்ட தொழில் அலுவலகங்கள்

| | மாவட்ட தொழில் அலுவலகம் | 31.12.2017 இல் மாவட்ட அலுவலகங்களுக்குப் பொறுப்பாக இருந்த உதவித் தொழில் ஆணையாளரது பெயர் |
|---|---|---|
| 1 | கொழும்பு மத்தி | திரு. டபிள்யு. எம். டி. ஆர். வீரக்கோன் |
| 2 | கொழும்பு தெற்கு | செல்வி. ஆர். பி. ஐ. உதயங்கனி |
| 3 | கொழும்பு மேற்கு | திருமதி, பி. பீ. சி. பேமபந்து |
| 4 | கொழும்பு கிழக்கு | திருமதி. என். ஆர். ரணவக்க |
| 5 | களுத்துறை | திருமதி.ஈ. சி. எஸ். வீரசிங்க |
| 6 | பாணந்துறை | திருமதி. எல். எம். ஹேவவித்தாரண |
| 7 | மத்துகம | திரு. கே. ஏ. பிரேமசிறி |
| 8 | மஹரகம | திரு. டி. எல். தயானந்த |
| 9 | கொழும்பு வடக்கு | திரு. ஏ. கே. டி. மிலங்க வீரக்கொடி |
| 10 | கம்பஹா | திரு. பி. ஏ. ஜெ. எம். பாலச்சந்திர |
| 11 | ஜா எல | திரு. பீ. ஏ. மகிந்த |
| 12 | நீர்கொழும்பு | திரு. சீ. ஜி. எச். சனத் லங்கா |
| 13 | இரத்தினபுரி | திரு. ஆர். ஜி. ஜே. பீ. குணதிலக |
| 14 | அவிசாவளை | திரு. பி. ஜி. ஆர். சந்திரவங்ச |

| | மாவட்ட தொழில் அலுவலகம் | 31.12.2017 இல் மாவட்ட அலுவலகங்களுக்குப் பொறுப்பாக இருந்த உதவித் தொழில் ஆணையாளரது பெயர் |
|---|---|---|
| 15 | பெல்மதுளை | திரு. ஜி. பி. எஸ். லியனகே |
| 16 | கேகாலை | திரு. கே. ஜி. ஜே. பீ. குருகொஹதென்ன |
| 17 | குருணாகலை | திரு. ஏ. டி. எஸ். ஆர். விஜயசிங்க |
| 18 | குளியாப்பிட்டி | திரு. எச். பி. டி. என். கே. ஜயசேகர |
| 19 | சிலாபம் | செல்வி. ஏ. எம். எஸ். சந்திரகா |
| 20 | புத்தளம் | திரு. எம். ஏ. ஏ. டி. பி. வி. முனசிங்க |
| 21 | மாஹோ | செல்வி. ஆர். எம். பி. ரத்நாயக்க |
| 22 | வென்னப்புவ | செல்வி. கே. எல். டி. வி. ரத்னகுமாரி |
| 23 | கண்டி வடக்கு | திரு. ஏ. ஆர். ஹேவாபத்திரண |
| 24 | கண்டி தெற்கு | திரு. பீ. ஏ. எஸ். பி. கே. பாலசூரிய |
| 25 | மாத்தளை | திரு. ஜே. எம். பி. கருணாரத்ன |
| 26 | ஹற்றன் | திரு. டபிள்யு. டபிள்யு. எஸ். பீ. மடுகல்ல |
| 27 | நுவர எலிய | திரு. ஈ. எம். பி. எக்கநாயக்க |
| 28 | காலி | திருமதி. என். பி. மானகே |
| 29 | மாத்தறை | திரு. டி. எச். ரி. தேசப்பிரிய |
| 30 | ஹம்பாந்தோட்டை | திரு. ஜே. எல். விக்ரமநாயக்க |
| 31 | பதுளை | திரு. டி. எம். காமினி (பதில்) |
| 32 | மொனராகலை | திரு. டி. எம். காமினி |
| 33 | ஹப்புத்தளை | திருமதி. ஆர். என். விக்ரமஆராச்சி |
| 34 | அனுராதபுரம் | திருமதி. ஆர். எம். ஐ. சி. கே. ரத்நாயக்க |
| 35 | பொலொன்னறுவை | திரு. கே. எம். ஆர். எல். ஜயதிலக |
| 36 | யாழ்ப்பாணம் | திருமதி. என். ஜெகதீஸ்வரன் |
| 37 | வவுனியா | திருமதி. எஸ். சிவரஞ்சனி |
| 38 | திருகோணமலை | திரு. ஏ. எம். பண்டாரநாயக்க (பதில்) |
| 39 | அம்பாறை | திரு. எம். எஸ். எம். அன்சார் |
| 40 | மட்டக்களப்பு | திரு. ஏ. கோகுலரஞ்சன் (வேலையைக் கவனித்தல்) |

உப தொழில் அலுவலகங்கள்

| | உப தொழில் அலுவலகம் | 31.12.2017 இல் உப தொழில் அலுவலகங்களுக்குப் பொறுப்பாக இருந்த சிரேஷ்ட தொழில் அலுவலரது பெயர் |
|---|---|---|
| 01 | யட்டியாந்தோட்டை | திருமதி. எல். என். கே. கே. எஸ். தயாரத்ன |
| 02 | எம்பிலிப்பிட்டிய | திருமதி. ஏ. ஜி. ஏ. ஸ்ரீயானி |
| 03 | வரகாபொல | திரு. ஜே. ஏ. சி. என். ஜயக்கொடி |
| 04 | கம்பளை | திருமதி. பீ. எச். எம். டபிள்யு. கே. பமுனுகேந்திர |
| 05 | நாவுல | திரு. எம். கே. எஸ். சிறிவர்தன |
| 06 | நாவலப்பிட்டி | திரு. யு. ஜி. கே. ஐ. பெரேரா |
| 07 | அம்பலாங்கொட | திருமதி. ரி. எச். எஸ். ஏ. சில்வா |
| 08 | எல்பிட்டிய | திரு. ஏ. பி. ஏ. பிரியந்த |
| 09 | மொரவக்க | திரு. கே. டபிள்யு. அத்தபத்து |
| 10 | பெலியத்த | திரு. ஐ. ஆர். வெல்லப்பிலி |
| 11 | மகியங்கனை | திரு. ஏ. எம். ஜே. கே. அத்தநாயக்க |
| 12 | மதவாச்சி | திரு. சி. எம். எம். சந்திரசேகர |
| 13 | கிளிநொச்சி | திரு. பி. பிரதீபன் |
| 14 | முல்லைத்தீவு | திரு. பி. பிரதீபன்(பதில்) |
| 15 | மன்னார் | திரு. அருட்செல்வம் (பதில்) |
| 16 | கந்தளாய் | திரு. எஸ். எம். நசார் |
| 17 | கல்முனை | திரு. எம். எஸ். ஹுஸைன் |

மாவட்ட தொழிற்சாலைப் பரிசோதனைப் பொறியியலாளர் அலுவலகங்கள்

| | மாவட்ட தொழிற்சாலைப் பரிசோதனைப் பொறியியலாளர் அலுவலகம் | 31.12.2017 இல் மாவட்ட தொழிற்சாலைப் பரிசோதனைப் பொறியியலாளர் அலுவலகங்களுக்குப் பொறுப்பாக இருந்த பொறியியலாளரது பெயர் |
|---|---|---|
| 01 | அனுராதபுரம் | திரு. எஸ். ஜி. திசாநாயக்க |
| 02 | பதுளை | திரு. எச். எம். ஏ. சி. நவரத்ன (தொழிற்சாலைப் பரிசோதனைப் பொறியியலாளர்) |
| 03 | கொழும்பு | திரு.ஈ. அபயசிறிவர்தன (விசேட தொழிற்சாலைப் பரிசோதனைப் பொறியியலாளர்) |
| 04 | காலி | திருமதி. எம். எச். ஐ. லக்மாலி |
| 05 | கம்பஹா | திரு. ஆர். ஜே. அபயசிறிவர்தன |

| | மாவட்ட தொழிற்சாலைப் பரிசோதனைப் பொறியியலாளர் அலுவலகம் | 31.12.2017 இல் மாவட்ட தொழிற்சாலைப் பரிசோதனைப் பொறியியலாளர் அலுவலகங்களுக்குப் பொறுப்பாக இருந்த பொறியியலாளரது பெயர் |
|---|---|---|
| 06 | யாழ்ப்பாணம் | திரு. வி. சுசீந்திரன் |
| 07 | கண்டி | திரு. கே. எம். வி. பீ. குலசேகர |
| 08 | களுத்துறை | திரு. ரி. ஜி. ஆர். கே. ஹேமச்சந்திர |
| 09 | குருணாகலை | திரு. எம். ஆர். விஜேதுங்க |
| 10 | இரத்தினபுரி | செல்வி. எம். ஆர். சி. ஏ. விஜேக்கோன் |

31.12.2017 இல் திணைக்களத்தின் ஆளணியில் ஏற்பட்ட மாற்றங்கள்

| | |
|---|---|
| வருடத்தின் தொடக்கத்தில் இருந்த ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை | 2400 |
| திணைக்களத்தினாலான புதிய ஆட்சேர்ப்பு மற்றும்இணைந்த சேவைகளினாலான புதிய ஆட்சேர்ப்பிலிருந்து திணைக்களத்திற்கான இணைப்புகள் | 253 |
| இடமாற்றங்கள், இளைப்பாறல்கள்மற்றும் திணைக்கள அலுவலர்களிலிருந்து விட்டுச் சென்றவர்கள் | (158) |
| வருட இறுதியில் இருந்த ஆளணியினரின் மொத்த எண்ணிக்கை | 2495 |

31.12.2017 இல் தொழில் திணைக்களத்தின் பதவியணியினர்

| | பதவி | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | தற்போதைய எண்ணிக்கை | அமைய தற்காலிக | வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|---|
| **சிரேஷ்ட மட்டம்** | | | | | |
| 1. | தொழில் ஆணையாளர் அதிபதி | 1 | 1 | | 0 |
| 2. | மேலதிக தொழில் ஆணையாளர் அதிபதி (இ.நி.சே.) | 1 | 1 | | 0 |
| 3. | மேலதிக தொழில் ஆணையாளர் அதிபதி (திணைக்கள) | 1 | 0 | | 1 |
| 4. | மேலதிக தொழில் ஆணையாளர் அதிபதி (பொறியியல்) | 1 | 1 | | 0 |
| 5. | வைத்திய அதிகாரி | 4 | | | 2 |
| | வைத்திய அதிகாரி | | 1 | | |
| | வைத்திய அதிகாரி (ஆராய்ச்சி) | | 1 | | |
| 6. | தொழில் ஆணையாளர் (இ.நி.சே.) (இருவர் வெளிநாட்டு தூதரக வேலையில் உள்ளனர்) | 6 | 8 | | -2 |
| 7. | தொழில் ஆணையாளர் | 2 | 0 | | 2 |

| | பதவி | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | தற்போதைய எண்ணிக்கை | அமைய தற்காலிக | வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|---|
| | (திணைக்கள) | | | | |
| 8. | தொழில் ஆணையாளரும் (தொழில்சார் பாதுகாப்பு) தொழிற்சாலைப் பரிசோதனை தலைமை பொறியியலாளரும் (இல. பொறியியலாளர் சே.) | 1 | 0 | | 1 |
| 9. | தொழில் ஆணையாளர் (இல. விஞ். சே. / இல. வைத்திய சே.) | 1 | 0 | | 1 |
| 10. | தலைமைக் கணக்காளர் | 1 | 1 | | 0 |
| 11. | தலைமைக் கணக்காய்வாளர் | 1 | 1 | | 0 |
| 12. | தலைமை சட்ட அலுவலரும் தொழில் ஆணையாளரும் (சட்ட வினைப்படுத்தல்) | 1 | 0 | | 1 |
| 13. | பிரதித் தொழில் ஆணையாளரும் – பிரதி தொழிற்சாலைப் பரிசோதனை தலைமை பொறியியலாளரும்(இல. பொறியியலாளர் சே.) | 1 | 0 | | 1 |
| 14. | பிரதித் தொழில் ஆணையாளர் (இ.நி.சே.) | 15 | 0 | | 15 |
| 15. | பிரதித் தொழில் ஆணையாளர் (திணைக்கள)(ஒருவர் வெளிநாட்டு தூதரக வேலையில் உள்ளார்) | 9 | 3 | | 6 |
| 16. | பிரதித் தொழில் ஆணையாளர் விசேட ஆராய்ச்சி அலுவலர் (இல. விஞ். சே.) | 1 | 0 | | 1 |
| 17. | கணக்காளர் | 5 | 5 | | 0 |
| 18. | உதவித் தொழில் ஆணையாளர் (இ.நி.சே.) (இருவர் வெளிநாட்டுப் புலமைப் பரிசில் பெற்றுச் சென்றுள்ளனர்) | 41 | 29 | | 12 |
| 19. | உதவித் தொழில் ஆணையாளர் (திணைக்கள)(ஐவர் வெளிநாட்டு தூதரக வேலையில் உள்ளனர்) | 63 | 58 | | 5 |
| 20. | சட்ட அலுவலர் | 14 | 12 | | 2 |
| 21. | உதவிப் பணிப்பாளர் – திட்டமிடல் | 1 | 1 | | 0 |
| 22. | விசேட தொழிற்சாலைப் பரிசோதனை பொறியியலாளர் (மின்சாரப் பாதுகாப்பு) | 1 | 1 | | 0 |
| 23. | விசேட தொழிற்சாலைப் பரிசோதனை பொறியியலாளர் (அதி அபாய இயந்திரப் பாதுகாப்பு) | 1 | 1 | | 0 |
| 24. | விசேட தொழிற்சாலைப் | 1 | 1 | | 0 |

| | பதவி | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | தற்போதைய எண்ணிக்கை | அமைய தற்காலிக | வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|---|
| | பரிசோதனை பொறியியலாளர் (கட்டுமானப் பாதுகாப்பு) | | | | |
| 25. | விசேட தொழிற்சாலைப் பரிசோதனை பொறியியலாளர் (இரசாயன / இயந்திரப் பாதுகாப்பு) | 1 | 1 | | 0 |
| 26. | விசேட தொழிற்சாலைப் பரிசோதனை பொறியியலாளர் | 3 | 1 | | 2 |
| 27. | மாவட்ட தொழிற்சாலைப் பரிசோதனை பொறியியலாளர் | 10 | 7 | | 3 |
| 28. | சிவில் பொறியியலாளர்(இல. பொறியியலாளர் சே.) | 1 | 0 | | 1 |
| 29. | தொழிற்சாலைப் பரிசோதனை பொறியியலாளர் (இல. பொறியியலாளர் சே.) | 14 | 14 | | 0 |
| 30. | இரசாயன பொறியியலாளர் | 2 | 2 | | 0 |
| 31. | சிரேஷ்ட ஆராய்ச்சி அலுவலர் (இல. விஞ். சே.) | 1 | 1 | | 0 |
| 32. | ஆராய்ச்சி அலுவலர் (இல. விஞ். சே.) | 3 | 2 | | 1 |
| 33. | உதவிப் பணிப்பாளர் (SLI ATS) | 1 | 0 | | 1 |
| | மொத்தம் | 210 | 154 | 0 | 56 |
| **மத்தியதர மட்டம்** | | | | | |
| 34 | நூலகர் (விசேட தரம்) | 1 | 0 | | 1 |
| 35 | தொழில்நுட்ப அலுவலர் (இல. விஞ். சே.) விசேட வகுப்பு | 1 | 0 | | 1 |
| 36 | கை விரலடையாளப் பரிசோதனை அலுவலர் (விசேட தரம் - இல. தொழில்நுட்ப சே.) | 1 | 0 | | 1 |
| 37 | தொழில் அலுவலர் (விசேட தரம்) | 56 | 0 | | 56 |
| 38 | பதிவாளர் | 1 | 1 | | 0 |
| 39 | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அலுவலர் | 3 | 2 | | 1 |
| 40 | மொழிபெயர்ப்பாளர் (சிங்களம் - ஆங்கிலம்) | 2 | 2 | | 0 |
| 41 | மொழிபெயர்ப்பாளர் (தமிழ் - ஆங்கிலம்) | 1 | 1 | | 0 |
| 42 | மொழிபெயர்ப்பாளர் (சிங்களம் - தமிழ்) | 3 | 0 | | 3 |

| | பதவி | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | தற்போதைய எண்ணிக்கை | அமைய தற்காலிக | வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|---|
| 43 | நிர்வாக அலுவலர் | 2 | 1 | | 1 |
| 44 | தொழில் அலுவலர் | 597 | 519 | | 78 |
| | மொத்தம் | 668 | 526 | 0 | 142 |
| இரண்டாம்தர மட்டம் | | | | | |
| 45 | வெளிக்கள அலுவலர் | 10 | 8 | | 0 * |
| 46 | மனிதவள அபிவிருத்தி அலுவலர் | 69 | 69 | | 0 * |
| 47 | அபிவிருத்தி அலுவலர் | 96 | 51 | | 45 |
| 48 | தொழில்நுட்ப அலுவலர் (சிவில்) | 1 | 0 | | 1 |
| 49 | தொழில்நுட்ப அலுவலர் (மின்சார) | 1 | 1 | | 0 |
| 50 | கை விரலடையாளப் பரிசோதனை அலுவலர் | 5 | 4 | | 1 |
| 51 | ஆராய்ச்சி உதவியாளர் | 4 | 0 | | 4 |
| 52 | கட்டிடப் பரிசோதகர் | 4 | 0 | 1 | 4 |
| 53 | படவரைஞர் | 3 | 2 | | 1 |
| 54 | நூலகர் | 4 | 3 | | 1 |
| 55 | முகாமைத்துவ உதவியாளர் சேவை | 1522 | 1172 | | 350 |
| 56 | இலிகிதர் (ஊ.சே.நி.) | 19 | 19 | | 0 * |
| 57 | சுருக்கெழுத்தாளர் | 15 | 11 | 1 | 4 |
| 58 | அலுவலகப் பொறுப்பாளர் | 4 | 3 | | 1 |
| 59 | விடுதிக் காப்பாளர் | 4 | 3 | | 1 |
| 60 | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் | 9 | 8 | | 1 |
| 61 | போக்குவரத்து அலுவலர் | 1 | 1 | | 0 |
| | மொத்தம் | 1771 | 1355 | 2 | 414 |
| ஆரம்ப மட்டம் | | | | | |
| 62 | வாகனச் சாரதி | 89 | 82 | | 7 |
| 63 | மின்னியலாளர் | 2 | 2 | | 0 |
| 64 | தச்சுவேலையாளர் | 1 | 1 | | 0 |
| 65 | குழாய் திருத்துநர் | 1 | 1 | | 0 |
| 66 | சுற்றுலா விடுதி மேற்பார்வையாளர் | 5 | 4 | | 1 |
| 67 | சிற்றூழியர் | 350 | 327 | | 23 |
| 68 | காவலாளி | 40 | 42 | | -2 ** |

|  | பதவி | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | தற்போதைய எண்ணிக்கை | அமைய தற்காலிக | வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|---|
| 69 | லொறி உதவியாளர் | 1 | 1 |  | 0 |
|  | மொத்தம் | 489 | 460 |  | 29 |
|  | **முழு மொத்தம்** | **3138** | **2495** | **2** | **643** |

*பொது நிறுவனங்களுக்கான பதவியணித் தேவைகள் தொடர்பான சிபார்சுகளின் கீழ் முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் அதிபதியின் 31.12.2012 ஆம் திகதிய DMS/C/08/36/01 – Vol 1 ஆம் இலக்க கடிதத்தினால் தொழில் திணைக்களத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட புதிய பதவியணியின் பிரகாரமும்,ஆளணித் தேவைகளும் பதவிகளை இல்லாதொழித்தலும் என்பவற்றுக்கிணங்கவும் இந்த ஆளணி மாற்றத்துக்குட்படுகிறது.

**2015 ஆம் ஆண்டின் வரவுசெலவுத்திட்ட முன்மொழிவின் அடிப்படையில் தற்காலிக, அமைய (நாளாந்த), ஒப்பந்த அல்லது மாற்று அடிப்படையிலானவர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்குவதற்கிணங்க, 8 காவலாளிகள் பதவிகளை அங்கீகரிப்பதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.